


மரணதண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்துவரும் துமிந்த சில்வாவுக்கு சாதாரண கைதிகளுக்கு வழங்கும் வசதிகளையே வழங்குமாறு சிறைச்சாலை மேலிடம் உத்தரவு வழங்கியுள்ளதாம்.

சிகிச்சை என்று துமிந்த சொகுசான வசதிகளுடன் வாழ்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதால் கடுப்பில் உள்ளதாம் அரச மேலிடம். துமிந்தவின் சகோதரருக்குச் சொந்தமான தொலைக்காட்சி, அரசைக் கடுமையாக விமர்சிப்பதே இதற்குப் பிரதான காரணமாம்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 146 குரோதி வருடம், மார்கழி மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை (13.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 12, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




என்னடாப்பா இந்த அரசாங்கத்தில முஸ்லிம் ஆக்களுக்கு முக்கிய இடமில்லாமல் இருக்கு...

## மூளைக் கட்டிகளை அடையாளம் காண புதிய இயந்திரம்



■ பாறுக் ஷிஹான்

மூளையிலுள்ள கட்டிகளை அடையாளம் காண்பதற்கு வரதராஜன் டிலக்சனால் புதிய இயந்திரமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூரைப் பிறப்பிடமாகவும்...

» 02 பக்கம்



சென்னையில் இடம்பெறும் 2025ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினத்தின் இறுதித் தினமான நேற்று தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கண்காட்சியில் தமிழ் அரசியல் பிரமுகர்கள் சுமந்திரன், சாணக்கியன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கைத்தொலைபேசியில் செல்பி எடுத்துக்கொண்டார்.

## சீன நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை இரத்தாக்குக!

### நிறுவனங்கள் கூட்டாக ஜனாதிபதியிடம் கோரிக்கை

இலங்கையின் மத்திய அதிவேக வீதித்திட்டத்தின் மிகவும் தாமதமான பிரிவு 1க்குப் பொறுப்பான சீன நிறுவனத்தின் ஒப்பந்தத்தை இரத்துச்செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

MCC என்ற மேட்ச்லலுர்ஜிக்கல் கோப்ரேஷன் ஒவ் சீனா (Metallurgical Corporation of China (Ltd)) நிறுவனத்துடனேயே இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், திறந்த, வெளிப்படையான ஏலச் செயல்முறையின் கீழ் புதிய கேள்விப்பத்திரங்களைக் கோருமாறு இலங்கையின் மிகப்பெரிய ஐந்து கட்டுமான நிறுவனங்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளன.

The Lanka Infrastructure Development Consortium (LIDC) PLC, Maga Engineering (Pvt) Ltd,... » 02 பக்கம்

## இறப்பருக்கு பற்றாக்குறை



தற்போது நாட்டில் இயற்கை இறப்பர் உற்பத்தி குறைவடைந்துள்ளதால் இறப்பருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாம் எண்ணெய் போன்ற ஏனைய இலாபகர மான பயிர்களுக்கு இறப்பர் செய்கை நிலங்கள் பயன்படுத்தப்படுவதால் இந்த நிலை ஏற்பட்டுள் ளதாக இறப்பர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிட்டுள்ளனர். » 02 பக்கம்

# உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமனத்தில் பாரபட்சம்

### மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் லபார் புறக்கணிப்பு

### அப்பீல் கோர்ட் தலைவர் இராஜிநாமா செய்யவுள்ளதாகவும் தகவல்

■ றிப்தி அலி

புதிதாக மேற்கொள்ளப்பட்ட உயர்நீதிமன்ற நீதியரசர்களின் நியமனத்தில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எம்.டி.எம்.லபார் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக நீதித்துறை வட்டாரங்கள் 'தமிழன்' செய்திகளுக்கு தெரிவித்தன.

தற்போது வெற்றிடமாகவுள்ள நான்கு உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார



திசாநாயக்கவினால் முன்மொழியப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்க அரசியலமைப்பு பேரவை கடந்த வாரம் அனுமதி வழங்கியது.

இதற்கமைய, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களான ஆர்.எம். சோபித ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத் பி. அபேயகோன் மற்றும் எம். சம்பத் கே.பி. விஜேரத்ன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர்களாக... » 02 பக்கம்



## கெலிஓயாவில் மாணவி கடத்தல்

## பட்டப்பகலில் பரபரப்பு

» 05 பக்கம்

## கரும்புகையை வெளியிடும் வாகனங்களுக்கு தடை: கறுப்புப் பட்டியலில் இணைக்கத் தீர்மானம்

கரும்புகையை வெளியிடும் வாகனங்களை கறுப்புப் பட்டியலில் இணைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம், எதிர்வரும் நாட்களில் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் ஒன்றிணைந்து சோதனை நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

அதன்போது கரும்புகையை வெளியிடும் வாகனங்கள் கண்டறியப்பட்டு அதன் சாரதிகளின் அனுமதிப்பத்திரத்தைப் பொலிஸாரும் வாகனத்தின் வருமான அனுமதிப்பத்திரத்தை மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளும் பொறுப்பேற்கவுள்ளனர்.

» 02 பக்கம்









» 03 பக்கம்

## தரம் 11 தவணைப் பரீட்சை வினாத்தாள் கசிவு

### விசாரணைக்கு ஐவரடங்கிய குழு

வடமத்திய மாகாணத்தில் தரம் 11 தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் மூன்று தேர்வுக்கு முன்னதாகவே கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ள ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மாகாணக் கல்விச் செயலாளரின் உத்தரவின்பேரில் குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. » 02 பக்கம்

# நாட்டின் பொருளாதார பின்னடைவும் வறுமையுமே பாடசாலை மாணவர்களின் இடைவிலகளுக்கு காரணம்

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு



*பு.கஜிந்தன்*

தற்போது பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகின்றது. இதற்கு காரணம் நாட்டின் பொருளாதார பின்னடைவும் கிராமிய வறுமையுமே என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த 725 மாணவர்களுக்கு, ஈழ நிசான் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் 07 இலட்சத்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (12) புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த அரசாங்கத்தை விட எமது அரசாங்கத்தில் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் கல்விக்கு மேலும் அதிக நிதியை ஒதுக்கி கல்வித் துறையை மேம்படுத்துவோம்.

நாட்டைவிட்டு செல்வோர் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது. நாங்கள் எமது நாட்டினுள்ளேயே தொழிற்துறைகளை உருவாக்கும்போது மாணவர்களும் இங்கே கல்வி கற்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

தங்கத் தீவாக இருந்த தீவகம், கடந்த ஆட்சியாளர்களின் திறனற்ற ஆட்சி காரணமாக தகரத் தீவாக மாற்றம் பெற்றுள்ளது. சுற்றுலாத்துறையை தீவகத்தில் அபிவிருத்தி செய்வதனூடாக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் இடமாக மாற்றுவதனூடாக தீவகம் மீண்டும் செந்தளிப்பு பெறும். தீவகத்தை மீண்டும் தங்கத் தீவாக மிளிர வைப்போம்.

எதிர்காலத்தில் வடக்கில் மூன்று மத்திய பொருளாதார நிலையத்தை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். ஒரு பொருளாதார மத்திய நிலையத்தை மாங்குளத்திலும் பரந்தன் - ஆனையிறவை மையப்படுத்திய இடத்தில் ஒரு பொருளாதார மத்திய நிலையத்தையும் பலாலியில் ஒரு பொருளாதார மத்திய நிலையத்தையும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இங்கேயே தொழில்துறையை உருவாக்கி, இங்கேயே உழைத்து உண்ணக்கூடிய ஒரு நிலையை உருவாக்குவோம். கடந்த காலத்தில் மனித வளம் சிறந்த முகாமைத்துவம் இல்லாமையால் வீணடிக்கப்பட்டது. ஆனால் இனி நாங்கள் மனித வளத்தை சிறந்த முறையில் திட்டமிட்டு நிர்வகித்து நாட்டைக் கட்டியெழுப்புவோம்” - என்றார்.

# சுங்கத்துறை விடுவிப்பு செயல்முறையை விரைவுபடுத்த சுங்க அதிகாரிகள் வாரத்தில் ஏழு நாட்களும் பணி



இலங்கை சுங்கம் மற்றும் துறைமுகங்கள் தொடர்பான சேவைகளை வழங்கும் சங்கங்களுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையில் நேற்று (12) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்களின் சுங்கத்துறை விடுவிப்பில் ஏற்படும் தாமதத்தை அடுத்த நான்கு நாட்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இலங்கை சுங்கம் உட்பட அரசதுறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி, துறைமுகம் தொடர்பான சேவைகளை வழங்கும் சங்கங்களின் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தார்.

இதன்போது துறைமுக துறையை அபிவிருத்தி செய்வதற்கான குறுகிய கால மற்றும் மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களைச் செயற்படுத்துவது அவசியமானபோதும் தற்பொழுது எழுந்துள்ள சூழ்நிலையைத் தீர்க்க, அனைவரும் இணைந்து செயற்படுவதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்பொழுது எழுந்த சூழ்நிலையைத் தீர்க்க, ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி, அரச மற்றும் தனியார் துறைகளுக்கு இடையே உடன்பாடு எட்டப்பட்டன.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களுக்கு அனுமதி வழங்கும் செயற்பாட்டில் நிலுவையில் உள்ள தேக்கத்தைத் தீர்க்க, இலங்கை சுங்க அதிகாரிகள் வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணிநேரமும் பணியாற்ற உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

பரிசோதனை மட்டத்திலுள்ள கொள்கலன்களை வைப்பதற்கான துரித நடவடிக்கையாக UCTயில் (Unity container Terminal) இடம் ஒதுக்க அமைச்சு முடிவு செய்துள்ளது. அதற்கமைய, புளூமெண்டல் பகுதியில் 05 ஏக்கர் காணியைப் பயன்படுத்த இதன்போது முடிவு செய்யப்பட்டது. ஜனவரி 31ஆம் திகதிக்குள் இரண்டு ஏக்கர் நிலத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் எஞ்சிய நிலத்தை பெப்ரவரி 28ஆம் திகதிக்குள் வழங்குவதற்கும் முடிவு செய்யப்பட்டது.

துறைமுக முனையத்தில் வேண்டுமென்றே கொள்கலன் லொறிகளை நிறுத்தி வைத்திருப்பது கொள்கலன் போக்குவரத்து நெரிசல் உக்கிரமடைய காரணம் என அடையாளம் காணப்பட்டதால், இந்தக் கொள்கலன் லொறிகளை நிறுத்துவதற்கு பேலியகொட பகுதியில் காணியொன்றை வழங்க அரசாங்கம் உடன்பாடு தெரிவித்தது.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களுக்கு சுங்கத்துறை விடுவிப்பு வழங்குவதில் இலங்கை தர நிர்ணய நிறுவனம், உணவு ஆணையாளர் திணைக்களம், தாவர தனிமைப்படுத்தல் பிரிவு ஆகியவற்றில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த நிறுவனங்களில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்பவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் நலன்புரி கொடுப்பனவுகளை அதிகரிக்கவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இதற்கான நிதி தேவை இருந்தால், துறைமுக அமைச்சினால் அதை வழங்க முடியும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களுக்கு சுங்கத்துறை விடுவிப்புக்கான நேரத்தில் பணிக்கு வராத தடயவியல் எழுதுவினைஞர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தனியார் சங்கங்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தன. இந்த ஊழியர்கள் சரியான நேரத்தில் வேலைக்கு அழைத்து வரும் பொறுப்பு சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்களிடமே உள்ளது என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க வலியுறுத்தினார்.

உணவு சார்ந்த பொருட்களுக்கு வெளிநாட்டு ஆய்வகங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள் கட்டாயம் என்பதையும் அதில் ஏதேனும் முறைகேடுகள் நடத்திருந்தால், அரசாங்க சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு இறக்குமதியாளர்கள் உடன்பாடு தெரிவித்தனர்.

துறைமுக வளாகத்துக்குள் கொள்கலன்களை சுங்கத்துறை விடுவிப்பு வரையான காலம் வரை கட்டணமின்றி தரித்து வைப்பதற்கான காலத்தை இரண்டு நாட்களாகக் குறைக்க முடிவு செய்யப்பட்டதாகவும் அடுத்த ஜூன் மாதத்துக்குப் பிறகு இதனை ஒரு நாளாகக் குறைக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த அவசரகால செயல்முறையை ஜூன் 30ஆம் திகதிவரை தொடர நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, துறைமுகங்கள், சுங்கம் மற்றும் துறைமுகம் தொடர்பான ஏனைய சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்கள் யாவும் ஒரே குடும்பமாக செயற்பட வேண்டும் என்றும் கூறினார்.

தற்பொழுது வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கொள்கலன் வாகனங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற துறைமுக சேவை வழங்கும் சங்கங்கள் கோரிக்கை விடுத்தன.

தொழில் அமைச்சரும் பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர்கள் ரஸ்ஸல் அப்பொன்சு, கபில பெரேரா, இலங்கை சுங்க அதிகாரிகள், இலங்கை துறைமுக அதிகாரிகள், இலங்கை தரநிர்ணய நிறுவன அதிகாரிகள், உணவு ஆணையாளர் திணைக்கள அதிகாரிகள், இலங்கை கப்பல் ஏற்றுவோர் சங்கத்தின் அதிகாரிகள், கொள்கலன் உரிமையாளர்கள் சங்கத்தின் அதிகாரிகள், கொள்கலன் போக்குவரத்து செய்பவர்கள் சங்கத்தின் அதிகாரிகள் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சுங்கத்துறை விடுவிப்பு அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# பொங்கல் பொதிகள் வழங்கல்!





*பு.கஜிந்தன்*

ஏ.ரி.சி. (ATC) கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று 1985ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களால், தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு பொங்கல் பொதி வழங்கும் நிகழ்வு நேற்று (12) ஞாயிற்றுக்கிழமை இணுவில் ATC கல்வி நிறுவனத்தில் இடம்பெற்றது.

ATC கல்வி நிறுவனத்தில் 1985 ஆம் ஆண்டு கல்விப் பொது தராதர சாதாரண தரத்தில் கல்வி கற்று புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் மாணவர்கள் இணைந்து தமது 56ஆவது அகவையை முன்னிட்டு குறித்த பொங்கல் பொதிகளை வழங்கினர்.

# இரண்டாக உடைந்த ரயில் தண்டவாளம்; ரயில்வே ஊழியரால் தடுக்கப்பட்ட விபத்து

## கொழும்பு – பதுளை புகையிரத பாதையில் சம்பவம்

மலையக ரயில் பாதையில் பரகும்புர மற்றும் அபேவெல ரயில் நிலையங்களுக்கு இடையில் புகையிரத இரும்புப் பாதை இரண்டாக உடைந்திருந்த நிலையில், ரயில்வே ஊழியரின் உடனடி நடவடிக்கையால் பாரிய விபத்தொன்று தடுத்து நிறுத்தப்பட்டது.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்கு ஒடிஸி ரயில் பயணித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெலிமடை திவிதொட்டவல பகுதியில் வசிக்கும், ரயில்வே துறையின் சாலைப் பிரிவில் ரயில்வே பயணக் காவலராகப் பணிபுரியும் தினேஷ் குமார (வயது30) என்ற ரயில்வே ஊழியரினாலேயே இந்த விபத்து தடுக்கப்பட்டது.

குறித்த ரயில் ஊழியர் பரக்கும்புரவிலிருந்து அபேவெல வரை ரயில்வே காவலராக பணியில் இருந்தபோது, ரயில் பாதை எண் 33/40 க்கு அருகில் உடைந்த ரயில் பாளத்தைக் கண்டார்.

உடனடியாக சம்பந்தப்பட்ட ரயில்வே அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.





இந்நிலையில் கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிச் செல்லும் எண் 1001 துன்ஹிந்த ஒடிஸி ரயில், பரக்கும்புர ரயில் நிலையத்தைக் கடந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

உடனடியாக ஒரு சிவப்புக் கொடியை கையில் ஏந்திய ரயில் காவலர் தினேஷ் குமார், ரயிலை நோக்கி முன்னோக்கி ஓடிச் சென்று, ஒடிஸி ரயிலை நிறுத்தினார். இதனால் பாரிய விபத்தொன்று தடுத்து நிறுத்தப்பட்டதுடன், அதன்போது ரயிலில் பயணித்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் காப்பாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இறப்பருக்கு பற்றாக்குறை...

இதன் காரணமாக இறப்பர் தொழில்களை நம்பியிருக்கும் தொழில்களின் உற்பத்தியினை விரிவுபடுத்துவதற்கும் சந்தை வாய்ப்பினை அதிகரிப்பதற்குமான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டயர் உற்பத்தியாளர்கள், உலர் இறப்பரின் பற்றாக்குறை காரணமாக உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தை தேவைகளை பூர்த்தி செய்வதில் சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.

இது தவிர, டயர் மற்றும் பிற இறப்பர் சார்ந்த தொழில்துறை பணியாளர்கள் நாட்டில் இயற்கை இறப்பரின் பற்றாக்குறை காரணமாக தங்கள் உற்பத்தி தளத்தை விரிவுபடுத்த முடியாதுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

உள்நாட்டு இறப்பரின் விலைகள் சர்வதேச விலைகளுக்கு இணையாக இருந்தால் மட்டுமே ஏற்றுமதி விடயத்தில் ஏனைய நாடுகளுடன் போட்டிபோட முடியும் என, இறப்பர் கையுறை உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இறப்பர் உற்பத்தியினை விரிவுபடுத்துவதற்கும் மீள் நடுகை செய்வதற்கும் தேசிய திட்டம் இல்லாததன் காரணமாக அந்நிய செலாவணியை ஈட்டும் இறப்பர் சார்ந்த தொழில்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## தரம் 11 தவணைப்...

மேலும், வினாத்தாள் கசிவு தொடர்பாக சிறப்பு தணிக்கையை தொடங்க மாகாண கல்விச் செயலாளர் சிறிமேவன் தர்மசேன அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டுள்ள வடமத்திய மாகாண தரம் 11க்கான பரீட்சையை எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மீண்டும் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தற்போது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை கிடைத்த தகவல்களின்படி, தவணைப் பரீட்சைக்கான சிங்கள இலக்கியம், அறிவியல் மற்றும் ஆங்கில வினாத்தாள்கள் கசியவிடப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவும் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மூளைக் கட்டிகளை...

வசிப்பிடமாகவும் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் தொழில்நுட்பப் பிரிவில் கல்வி பயின்று யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரிக்கு சென்ற வரதராஜன் டிலக்சனால், மூளையில் உள்ள கட்டிகளை அடையாளம் காணும் செயற்றிட்டம் (The Brain Tumour Navigation System Project) வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியின் (Mechatronic Engineering Technology) பிரிவின், இறுதி ஆண்டு மாணவராவார்.

# மீன் பிடிக்கச் சென்றவர் திடீர் உயிரிழப்பு

*யாழ்ப்பாணம் நிருபர்*

யாழ்ப்பாணத்தில், நேற்று முன்தினம் (11) மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் ஒருவர் நேற்று (12) காலை உயிரிழந்துள்ளார்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த அல்போன்சோ சந்தியாப்பிள்ளை (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இரு மீனவர்கள் நேற்று முன்தினம் கடற்றொழிலுக்கு சென்ற நிலையில், குறித்த மீனவருக்கு உடல் சுகயீனம் ஏற்பட்டது. அவரை ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்ப்பித்தவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கரும்புகை வெளியிடும்...

அதன் பின்னர் 14 நாட்களுக்குள்ளாக குறித்த வாகனம் கரும் புகை வெளியிடுவதற்கான காரணம் கண்டறியப்பட்டு, அதனை நிவர்த்தி செய்தாக வேண்டும்.

பின்னர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகள் முன்னிலையில் வாகனம் ஓட்டிக் காண்பிக்கப்பட்டு கரும்புகை வெளியாகவில்லை என்று நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே அந்த வாகனத்தை தொடர்ந்தும் பயன்பாட்டில் வைத்திருக்க அனுமதி வழங்கப்படும்.

அவ்வாறில்லாத வாகனங்களை கறுப்புப் பட்டியலில் இணைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குறித்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சீன நிறுவனத்துடனான...

International Construction Consortium (Pvt) Ltd (ICC), KDA Weerasinghe & Co. (KDAW), kw;Wk; NEM Construction மற்றும் NEM Construction என்பனவே அந்த நிறுவனங்களாகும்.

சீன நிறுவனமான MCC உடனான ஒப்பந்தம் மிகவும் விலை உயர்ந்தது என்றும் இந்த நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்நிலையில், பிரிவு 1 இன் மீதமுள்ள பணிகள் உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டால் குறிப்பிடத்தக்க செலவுக் குறைப்பு இருக்கும் என்று இந்த நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

குறிப்பாக சீன நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்டுள்ள தற்போதைய ஒப்பந்தத்தின்கீழ், ஒரு கிலோமீற்றருக்கு சுமார் 33 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என விலை குறிக்கப்பட்டுள்ளது.

எனினும், பகுதி 2க்கு உள்ளூர் நிறுவனங்களால் ஒரு கிலோமீற்றர் ஒன்றுக்கு சுமார் 18 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே குறிக்கப்பட்டுள்ளதாக கட்டுமான நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.


## பெயர் மாற்றம்

இல.40, தலைவர் வீதி, அக்கரைப்பற்று 8/3ஐச் சேர்ந்த சுரேந்திரராஜா விந்தியா (200269003144) ஆகிய நான் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி எனது பெயரை சுரேந்திரராஜா ஆயிஷா என மாற்றிக்கொண்டுள்ளேன். தற்போது 143, தெற்கு வடிகான் வீதி, ஒலுவில் 02ஐ வசிப்பிடமாகக்கொண்டுள்ளேன். இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன். அவ்வாறே கையொப்பமிடுவேன் என இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**சுரேந்திரராஜா ஆயிஷா**


## உயர்நீதிமன்ற...

நேற்று (12) ஞாயிற்றுக்கிழமை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் சிரேஷ்டத்துவத்தில் முறையே 1ஆம், 2ஆம், 4ஆம் மற்றும் 5ஆம் இடங்களில் காணப்பட்டனர். எனினும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 3ஆவது சிரேஷ்டத்துவத்திலுள்ள நீதியரசர் லபார், உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு ஜனாதிபதியினால் முன்மொழியப்படவில்லை என்ற விடயம் தற்போது தெரியவந்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனகே அலுவிகார, பிரியந்த ஜயவர்த்தன மற்றும் விஜித் மலல்கொட ஆகியோரின் ஓய்வினை அடுத்து உயர்நீதிமன்ற நீதியரசர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கே புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக சோபித ராஜகருணா நியமிக்கப்படுவதற்கு முன்னர், சட்ட மா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட சொலிசிட்டர் ஜெனரலாக பணியாற்றியுள்ளார். நீதியரசர் மேனகா விஜேயசுந்தர சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அரச சட்டத்தரணியாக செயற்பட்ட நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அதிலிருந்தே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, நீதியரசர்களான சம்பத் பி. அபயகோன் மற்றும் எம்.சம்பத் கே.பி.விஜேரத்ன ஆகிய இருவரும் நீதவான், மாவட்ட நீதிபதி மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி ஆகிய பதவிகளை வகித்த பின்னரே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்கப்பட்டனர்.

இவர்களைப் போன்றே நீதியரசர் லபாரும் நீதவான், மாவட்ட நீதிபதி மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி ஆகிய பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உயர்நீதிமன்ற நீதியரசராக தற்போது இவர் நியமிக்கப்படாமையினால் எதிர்வரும் ஜூன் மாதம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஓய்வுபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் 63 வயது வரையே கடமையாற்ற முடியும்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராகவுள்ள நீதியரசர் நிசங்க பந்துல கருணாரத்ன, குறித்த பதவியிலிருந்து இம்மாத இறுதியில் இராஜினாமா செய்யவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் இவருக்கு எதிராக விரைவில் குற்றப் பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ளதாக அறிய முடி கின்றது.

இவ்வாறான நிலையிலேயே மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் பதவியிலிருந்து இவர் இராஜினாமா செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் ஜூன் 16ஆம் திகதி இவர் 63 வயதை அடையவுள்ளமையினால் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஓய்வுபெறவுள்ளார்.

நீதவானாக தனது நீதித்துறையை ஆரம்பித்த நீதியரசர் நிசங்க பந்துல கருணாரத்ன பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரானார். உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு இவருடைய பெயர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்டது.

எனினும், அரசியலமைப்பு பேரவையினால் குறித்த முன்மொழிவு நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பு பேரவையின் இந்த தீர்மானத்தினை சவாலுக்குட்படுத்தி சட்டத்தரணி ஒருவரினால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த டிசம்பர் மாதம் இந்த மனுவினை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தமை குறிப்பிடத்தக்கது. இந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில அவதானிப்புகளை நீதியரசர் நிசங்க பந்துல கருணாரத்னவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு பயன்படுத்த அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் அறியப்படுகின்றது. இதேவேளை, உயர்நீதிமன்ற நீதியரசர்களின் நியமனங்களை அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நான்கு நீதியரசர்களுக்கான வெற்றிடங்கள் தற்போது ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மார்கழி மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள். புதிய பொருள்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள். வாய்வார்த்தைகளால் குழப்பங்கள் ஏற்படும். கோபத்தால் பகை.

**மிதுனம்** உடல் நலம் சீராக இருக்கும். தொழில், வியாபார நன்மைகள் உண்டு. நினைத்ததை இன்று சாதிப்பீர்கள்.

**கடகம்** உங்கள் மதிப்பினை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள். உணவு, உறக்கம் இன்றி சிரமப்படுவீர்கள்.

**சிம்மம்** எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள். உடல் நோய்களில் அக்கறை காட்டுங்கள். கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள்.

**கன்னி** எதிர்கால வாழ்க்கைப்பற்றிய சிந்தைகளில் இருப்பீர்கள். நண்பரின் எதிர்பாராத உதவியால் ஆனந்தமடைவீர்கள்.

**துலாம்** நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும். யாரையும் வீணே பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**விருச்சிகம்** உடலைக் கெடுக்கும் எந்த முயற்சியும் நன்மை தராது. கோபத்தை குறைத்துக் கொண்டால் இலாபம் உண்டு.

**தனுசு** காதல், திருமணம் கைகூடும். உள்ளாச மாகவும் மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள். புதிய முயற்சிகள் வேண்டாம்.

**மகரம்** சில விடயங்களுக்காக மற்றவர்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டே ஆக வேண்டும். டென்ஷன் வேண்டாம்.

**கும்பம்** புத்திரர்களால் சற்று மனக்கவலை ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகளை நழுவ விடுவீர்கள். அரச வகையில் சற்று சங்கடங்கள் உண்டு.

**மீனம்** குடும்பத்தில் மகிழ்ச்சியும் அன்பும் அமையும் நாள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**திதி** : பௌர்ணமி பி.இ.3.56 வரை பின் பிரதமை
**நட்சத்திரம்** : திருவாதிரை மு.ப.10.38 வரை பின் புனர்பூசம்
**பிறை** : வளர்பிறை பி.இ.3.56 வரை பின் தேய்பிறை
**யோகம்** : மரண யோகம் முழுவதும்
**வார சூலை** : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்** : காலை- 6.26 – 7.26 மணிவரை. பகல் - 1.26 – 2.26 மணிவரை. மாலை-3.26 – 4.26 மணிவரை.
**ராகு காலம்** : 7.56 – 9.26 மணிவரை
**எமகண்டம்** : 10.56– 12.26 மணிவரை
**குளிகை** : 1.56 – 3.26 மணிவரை
**சந்திராஷ்டமம்** : விருச்சிக-தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் (பின்னிரவு 4.19 வரை விருச்சிக ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**
**இன்று முற்பகல் 10.38 மணிவரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி
**இன்று முற்பகல் 10.38 மணிக்குமேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி
**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**
**விசேட தினம்**: பௌர்ணமி விரதம், போகிப் பண்டிகை



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் எண்மர் கைது







*பு.கஜிந்தன்*

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் எண்மர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இரண்டு விசைப்படகுகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

ராமேஷ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற 08 மீனவர்கள் வடக்கு மன்னார் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் நேற்று (12) அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 08 மீனவர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 2024ஆம் ஆண்டு 72 படகுகள் சிறைப்பிடிக்கப்பட்டு 554 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லை!

## வன்னித் தேர்தல் தொகுதியில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் குற்றச்சாட்டு

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலானது கடந்த வருடம் நவம்பர் 14ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது தேர்தல் கடமைகளில் பல அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

குறித்த உத்தியோகத்தர்களுக்கான தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுகள் பல மாவட்டங் களிலும் வழங்கப்பட்டுள்ளபோதும், வன்னித் தேர்தல் தொகுதியில் வழங்கப்படவில்லை என கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வன்னித் தேர்தல் தொகுதியில் தேர்தல் நடவடிக்கைக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப் பட்ட நிதியில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகவும் இதன் காரணமாக வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தற்காலிகமாக பணி இடைநிறுத்தப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் இதன்காரணமாக தேர்தல் கடமையில் ஈடுபட்டவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலகத்தில் இருந்து அறிய முடிகிறது.



*தந்தை செல்வா நற்பணி மன்ற அறநெறி பாடசாலை ஏற்பாட்டில் மார்கழி திருவாதிரை திருவெம்பாவை வீதி பஜனை கடந்த வெள்ளிக்கிழமை (10) காலை இடம்பெற்றது. இதில் அகில இலங்கை இந்து மா மன்றத்தின் பிரதி தலைவர் கலாநிதி சின்னதுறை தனபாலா முன்னிலையில் கொட்டாஞ்சேனை கலைமகள் வித்தியாலயம், கணபதி மகளிர் வித்தியாலயம் மற்றும் மத்திய கொழும்பு இந்து வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர் கலந்துகொண்டனர். மன்றத்தின் தலைவர் எஸ்.கே.களையரட்ணம், பொதுச்செயலாளர் வீ.சோமசுந்தரம் ஆகியோரும் கலந்துகொண்டனர். பஜனையில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மா மன்றத்தினால் வெளியிடப்பட்ட நந்தி கொடிகள் மற்றும் அப்பியாச புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.*

# விவேகானந்தரின் பிறந்த தினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு





*வவுனியா நிருபர்*

சுவாமி விவேகானந்தரின் 162ஆவது பிறந்த தின நிகழ்வு வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள நினைவுத் தூபியில் நேற்று (12) காலை இடம்பெற்றது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மற்றும் வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவரது உருவச் சிலைக்கு, மலர் மாலை அணிவித்து, மலர்தூவி நினைவு கூரப்பட்டது. அவர் தொடர்பான நினைவுரைகளை தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்கள் வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் ப.சத்தியநாதன் மற்றும் உறுப்பினர்கள், நகரசபை செயலாளர் அ.பாலகிருபன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு:

# பாராளுமன்ற ஊழியர்கள் மூவர் பணி இடைநீக்கம்

பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, பாராளுமன்ற ஊழியர்கள் மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற கேட்டரிங் மற்றும் ஹவுஸ்கீப்பிங் துறையில் பணியாற்றும் மூன்று ஊழியர்களே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தை விசாரித்த முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற நிர்வாகம் உறுதிப்படுத்தியது.

பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் ஓகஸ்ட் 2023 இல் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிகளை மீள கையளிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எந்தவிதத்திலும் நீடிக்கப்படாது

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

தனிநபர்களுக்கு தற்காப்புக்காக வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீள கையளிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எந்தவிதத்திலும் நீட்டிக்கப்படாது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தற்போது தனிப்பட்ட பாதுகாப்புக்காக பொலிஸ் மற்றும் இராணுவத்தினரிடமிருந்து அனுமதிப்பத்தி ரத்துடன் பெற்றுக்கொண்டுள்ள அனைத்து துப்பாக்கிகளையும் ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு துப்பாக்கிகளை ஒப்படைக்காமல் தம்வசம் வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை திருப்பி அனுப்புவதற்கான கால அவகாசம் கடந்த டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது.

எனினும், போர் இடம்பெற்ற காலத்தின்போது பொலிஸ் மற்றும் இராணுவத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீள ஒப்படைப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி 13ஆம் திகதி திங்கட்கிழமை

# ஜஸ்டின் ட்ரூடோவும் ஈழத்தமிழர்களும்

கனடாவில் எதிர்பார்க்கப்பட்டபடியே பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகுவதாக கடந்த வாரம் அறிவித்தார்.

கனடாவின் ஒட்டாவா நகரிலுள்ள தனது வீட்டில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர், “2015ஆம் ஆண்டில் பிரதமரான கணம் முதலே கனடாவுக்காகவும் கனேடிய மக்களுக்காகவும் பாடுபட்டு வந்துள்ளேன். நடுத்தர மக்களின் மேம்பாட்டுக்காக உழைத்துள்ளேன். கொரோனா தொற்றுக் காலத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் தோள் கொடுத்ததைக் கண்ணுற்றேன். வட அமெரிக்க கண்டத்தில் தடையில்லா வர்த்தகம் நீடிக்க உழைத்தேன்” - என்றார்.

தனது கடந்த கால செயற்பாடுகளை விவரித்த பிறகு அவர் தனது பதவியை இராஜிநாமா செய்வது குறித்த அறிவிப்பை வெளியிட்டார். கட்சியின் தலைவர் மற்றும் பிரதமர் பதவியிலிருந்து விலக விரும்புவதாக அறிவித்த அவர், அடுத்த தலைவர் தெரிவுசெய்யப்படும் வரை தற்போதைய பதவியில் நீடிப்பேன் - என்றார்.

2015இல் மிகப் பெரிய எதிர்பார்ப்புகளுடன் பிரதமரான 43 வயது ஜஸ்டின் ட்ரூடோ அடுத்த 09 ஆண்டுகளில் பரவலான அதிருப்தியுடன் பதவி விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பிரதமர் ட்ரூடோ பதவி விலகியிருப்பதன் மூலம் லிபரல் கட்சியை மட்டுமல்ல, கனடாவையும் மிகப் பெரிய தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியிருக்கிறார்.

கடந்த 09 ஆண்டுகளாகப் பதவியிலிருந்த ஜஸ்டின் ட்ரூடோ ஜனவரி 6ஆம் திகதி பதவி விலகினார் என்பதைவிட பதவி விலக வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார் என்பதுதான் உண்மை. பதவி விலகினாலும்கூட பாராளுமன்றத்தைக் கலைக்கவில்லை; மறு தேர்தலுக்கு வழிகோலவில்லை.

இன்னொருவர் லிபரல் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்படும்வரை ஜஸ்டின் ட்ரூடோ பிரதமராகத் தொடருவார். அவரது சிறுபான்மை அரசு கவிழ்ந்துவிடாமல் மாற்று ஏற்பாட்டுக்கு வழிகோலியிருந்தாலும் அது சாத்தியமா என்பது சந்தேகம் தான்.

2011 பொதுத் தேர்தலில் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு வரலாற்றிலேயே முதல் முறையாக கனடாவில் லிபரல் கட்சி படுதோல்வி அடைந்தது. 2013இல் 43 வயது ஜஸ்டின் ட்ரூடோ அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து கட்சிக்கு மறுவாழ்வு கிடைத்தது என்றுதான் கூற வேண்டும். 15 ஆண்டுகள் தொடர்ந்து பிரதமராக இருந்த பியரி எலியட் ட்ரூடோவின் மகனான ஜஸ்டின் ட்ரூடோ லிபரல் கட்சிக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த கனடாவுக்குமே நம்பிக்கை நட்சத்திரமாகத் தெரிந்தார்.

2015 தேர்தலில் கனடாவில் ஜஸ்டின் ட்ரூடோ அலை அடித்தது என்றுதான் கூறவேண்டும். அவர் முன்மொழிந்த முற்போக்குக் கருத்துகளும் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும் வாக்குறுதிகளும் மக்களைக் கவர்ந்தன. கனடாவுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த இருப்பதாகச் சொன்ன ஜஸ்டின் ட்ரூடோவின் சுறுசுறுப்பும் இளமைத் துடிப்பும் வாக்காளர்களை ஈர்த்தன. பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, பாலின சமத்துவம், இன வேறுபாடு இல்லாத ஒருங்கிணைந்த சமூகம் உள்ளிட்ட கருத்துகளை அவர் முன்வைத்தபோது மக்கள் அவருக்குப் பின்னால் அணிதிரண்டனர்.

தனது வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் 2015இல் அமைந்த ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி மாற்றத்துக்கான பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த முற்பட்டது. அவரது குழந்தைகளுக்கான திட்டமும் தேசிய கார்பன் வரி விதிப்புத் திட்டமும் மக்களைக் கவர்ந்தன. மாறுதலுக்கான தலைவராக அவர் கருதப்பட்டார்.

அடுத்த சில ஆண்டுகள் கனடாவில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் நம்பிக்கையை ஏற்படுத்தும் அரசியல் நட்சத்திரமாக உயர்ந்தார் ஜஸ்டின் ட்ரூடோ. அவரது முற்போக்கு பார்வையும் அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொள்ளும் செயற்பாடும் உலகளாவிய அளவில் வியந்து பாராட்டப்பட்டன. ஆனால், அவையெல்லாம் ஆண்டுகள் நகர, நகர வலுவிழந்தன. அவரது ஆட்சிக்கு எதிரான அதிருப்தி அதிகரித்து, அவரது செல்வாக்கு மங்கத் தொடங்கியது. ஒன்றன்பின் ஒன்றாக அவரது நிர்வாகம் பல விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் எதிர்கொள்ளத் தொடங்கியது.

அவரது தவறான அணுகுமுறையும் விலைவாசி உயர்வாலும் குடியிருப்புகள் தட்டுப்பாட்டாலும் அதிகரித்த பொருளாதாரச் சவால்கள் காரணமாக அரசு மீதான நம்பிக்கை குறையத் தொடங்கியது. 2019 பொதுத்தேர்தலில் பதவியைத் தக்கவைத்தாலும்கூட அவரது ஆட்சி வலுவிழக்கத் தொடங்கியது.

2021இல் ஆட்சியைக் கலைத்துவிட்டு மூன்றாவது முறையாகத் தேர்தலைச் சந்திக்க முற்பட்டார் ட்ரூடோ. அந்தத் தவறான முடிவால் ஏற்கனவே சிறுபான்மை அரசாக இருந்த அவரது கட்சியின் எம்.பிக்களின் எண்ணிக்கை மேலும் குறைந்தது.

தன்னைப் பதவியில் தக்கவைத்துக்கொள்ள கவனத்திருப்பு முயற்சிகளில் ஈடுபட்டார் பிரதமர் ட்ரூடோ. காலிஸ்தான் அமைப்பினரை ஆதரிக்க முற்பட்டதால் இந்தியாவுடனான இருநாட்டு உறவு வரலாறு காணாத வீழ்ச்சியை எதிர்கொண்டது.

கனடாவில் 18 இலட்சம் இந்திய வம்சாவளியினர் இருக்கிறார்கள். அவர்களில் கணிசமானவர்கள் சீக்கியர்கள். பத்து இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாடுவாழ் இந்தியர்கள் இருக்கிறார்கள். கனடாவின் மக்கள்தொகையில் 3%க்கும் அதிகமான இந்தியர்கள் வாழ்கிறார்கள். 04 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய மாணவர்கள் கனடாவில் வசிக்கிறார்கள்.

குடியுரிமை வழங்குவதில் ஜஸ்டின் ட்ரூடோ அரசு தாராளமயக் கொள்கையைக் கடைப்பிடித்ததால், ஈழத்து தமிழர்கள் உட்பட வெளிநாட்டினர் பலர் கனடாவில் குடியேறினர். அவர்களது வாக்குவங்கியைக் குறிவைத்த பிரதமர் ட்ரூடோவின் நகர்வை லிபரல் கட்சியின் ஆதரவாளர்கள் ஆதரிக்கவில்லை.

கனடாவின் மீது கூடுதல் இறக்குமதி வரி விதிக்கப்போவதாகவும் கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைக்கலாம் என்றும் கூறும் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் நிலையில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியிருக்கிறார். தேர்தல் நடந்தால் கன்சர்வேடிவ் கட்சி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைக்கக்கூடும். இல்லையென்றால் பலவீனமான கனடா, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை எப்படி எதிர்கொள்ளப் போகிறது?

இலங்கையைப் பொறுத்தவரை ஈழத் தமிழர் ஆதரவாளரான ட்ரூடோ, அரசியல் ரீதியாக சரிவைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடையக்கூடும். ஈழத் தமிழர்கள் போராட்டத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டுக்கப்பால் கனடாவில் புலிகள் இயக்க நிகழ்வுகள் சுதந்திரமாக அரங்கேறுவதற்கும் புலிகளின் கொடி ஏற்றப்படுவதற்கும் அனுமதி வழங்கிய காரணத்தினால் இலங்கை ஆட்சியாளர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தார் ட்ரூடோ. இப்போது அவரின் பதவி விலகலால் மகிழ்ச்சியடைந்திருக்கும் மற்றைய தரப்பு இலங்கை. சர்வதேச அரங்கில் ஈழ ஆதரவாளர் ஒருவருக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவே இலங்கை ஆட்சியாளர்களுக்கு மகிழ்ச்சியை நிச்சயம் தரும். கனடா போன்ற நாட்டின் சமஷ்டி முறைமை இலங்கைக்கு தேவைப்படும் ஒரு காலகட்டத்தில் ஈழத் தமிழர் ஆதரவு சக்தி பலவீனமடைந்திருப்பது தமிழர்களுக்கு பின்னடைவே.

# அந்தனி ஜீவா என்ற பெறுமதிமிக்க எழுத்தாளன்



– ரா.நித்தியானந்தன் –

‘‘மனிதர்கள் இறப்பது இயல்பு. அதை மாற்ற முடியாது. ஆனால், மனிதர்களின் இறப்புடன் மனிதர்களின் நிகழ்வின் பெறுமதியையும் உறவையும் தொடர்பாடலையும் இழந்து விடுகின்றோம் என்பது தான் பெரும் துயரம். அதிலும் எழுத்தாளர்களின், கலைஞர்களின் இழப்பானது மிகப்பெரும் துயரத்தைக் கொண்டு வருகிறது.

எழுத்தாளர் அந்தனி ஜீவாவின் மரணம் எம் மனதில் பெரும் துயரை விட்டுச் சென்றுள்ளது. ஜீவா கண்டியிலும் கொழும்பிலும் வாழ்ந்த காலத்தில் கலை இலக்கியத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு எம் நினைவைக் கடந்து போகிறது.

கண்டியில் வாழ்ந்த காலப்பகுதியில் ஜீவா மகத்தான இலக்கிய பணியைப் பதிவு செய்துள்ளார் என்பது மறுக்க முடியாதது. அவர் பங்கு பெறாத இலக்கிய அமர்வே கிடையாது என்று கூறுமளவுக்கு அவருடைய பணியும் பங்களிப்பும் காணப்பட்டிருக்கின்றன. இலக்கிய படைப்பாளனாக மாத்திரமன்றி, ஓர் இலக்கிய செயற்பாட்டாளராகவும் அவர் விளங்கினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நானும் ஜீவாவும் எத்தனையோ இலக்கியப் பணிகளில் இணைந்து பணியாற்றியுள்ளோம். எனக்கு விபரம் தெரிந்த நாள் முதல் அவரைப் பார்த்து இலக்கியத்தைப் பழக்கமாக்கிக் கொண்டவன் நான்.

எண்பதுகளில் கண்டியில் சமூக இலக்கிய வட்டம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியிருந்தோம். அதனுடைய முதலாவது அமர்வை ‘சத்தியோதய’ நிலையத்தில் ஏற்பாடு செய்தபோது அவரே சிறப்புரையாளராகப் பங்கு கொண்டார். அப்போதிருந்து இவரை நான் நன்கு அறிந்தவராக அவரோடு இணைந்து இலக்கியப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளேன் . 1980இல் தமிழக எழுத்தாளர்களான ராஜம் கிருஷ்ணன், சிதம்பர ரகுநாதன் ஆகியோர் கண்டி திரித்துவ கல்லூரிக்கு வந்திருந்தபோது, ஜீவாவே எம்மை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, நாம் அப்போது வெளியிட்ட ‘திரள்’ என்ற சஞ்சிகைக்கான ஒரு நேர்முகக் காணலுக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தார்.


இலக்கிய படைப்பாளர்களை, கலைஞர்களை இவர் இலகுவில் இனம் கண்டு கொள்வார். ஜீவாவைப் பொறுத்தவரையில் அவருக்கு கலை, இலக்கியத்தில் ஒரு பன்முக ஆளுமை இருந்தது என்பதைக் கண்டுகொள்ளலாம். இதழியல் துறை, நாடகத்துறை, இலக்கியம் என்பவற்றில் அதிகமாகத் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட ஓர் எழுத்தாளராக இவர் காணப்பட்டார். அது மாத்திரமல்லாமல், இலக்கிய அமர்வுகளை ஏற்பாடு செய்வது, இலக்கிய படைப்பாளர்களை ஒன்று திரட்டுவது என்ற ஒரு மகத்தான பணியையும் இவர் மேற்கொண்டார். எழுத்தாளர் ஜெயகாந்தனைப் போல இவரும் முழு நேர இலக்கியப் படைப்பாளராகச் செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக இவரது கலை இலக்கிய வாழ்க்கையை ‘ஒரு வானம்பாடியின் கதை’ என்ற தொடராக ஜீவ நதியில் இவர் பதிவு செய்தது இங்கு குறிப்பிடத்தக்கது. நான் அறிந்தவரை 20க்கும் மேற்பட்ட இலக்கிய படைப்பாக்க நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஜீவாவைப் பற்றிக் கதைக்கின்ற போது, அவருடைய ஆரம்ப கால நண்பர்கள் அவருடைய நாடக முயற்சிகளை பெரிதாகக் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இவர் எழுதிய முதல் நாடகமான ‘முள்ளில் ரோஜா’ 1970 இல் மேடையேறியது. 1970களில் தொழிலாளர் வர்க்கப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்ட ‘அக்கினிப்பூக்கள்’, ‘வீணை அழுகின்றது’ முதலான நாடகங்களை உருவாக்கினார் என்பது நினைவூட்டத்தக்கது. கண்டித் தமிழ்ச் சங்கம் உருவாவதற்கும் அதனூடாக பல இலக்கியப் பணிகள் செய்வதற்கும் இவரே காரணமாக இருந்தார் என்பதை இங்கு நினைவு கூருவது பொருத்தமானது.

2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருச்சியில் உலக பண்பாட்டு தமிழர் மாநாடு இடம்பெற்றபோது என்னையும் ஜீவாவே அந்த மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார். நான் சமர்ப்பிக்க வேண்டிய ஆய்வுக் கட்டுரையை அவரே மாநாட்டுக்கு அனுப்பி வைத்தார். நானும் அவரும் இணைந்தே அந்த மாநாட்டுக்குச் சென்றோம். அந்நிகழ்வில் பெரும்பாலான தமிழக எழுத்தாளர்கள் பங்கு கொண்டிருந்தார்கள். அவரிடத்தில் நான் அவதானித்த மிக முக்கியமான ஒரு விடயம் தமிழகத்தில் இவருக்கு அறிமுகமில்லாத எழுத்தாளர்களே இல்லை என்றே கூறலாம். அந்தளவுக்கு எழுத்தாளர்களோடு பரிச்சயம் உள்ளவராக இவர் விளங்கினார். நானும் அவரும் அப்போது எழுத்தாளர் ஜெயகாந்தன் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்திப்பதற்கான ஒரு வாய்ப்பு இவராலேயே எனக்குக் கிடைத்தது.

அச்சமயம் ஓர் இலக்கிய அமர்வு, ஓவியர் புகழேந்தியின் ஏற்பாட்டில் சென்னையில் இடம் பெற்றது. இவரே என்னை அந்த இலக்கிய அமர்வுக்கு அழைத்துச் சென்றது மாத்திரமில்லாமல், நான் அப்போது வெளியிட்டிருந்த ‘மூன்றாம் பரிணாமம்’ என்ற எனது சிறுகதைத் தொகுதியை எழுத்தாளர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கின்ற மிகப்பெரும் பணியை அவர் ஆற்றினார் என்பதை நான் இங்கு மறக்க முடியாதவனாக இருக்கிறேன். இவ்வாறு ஜீவாவைப் பற்றிச் சொல்வதற்கு நிறைய நினைவுகளும் தடங்களும் இருக்கின்றன. ஆனால், இடச் சூழல் கருதி இந்தப் பத்தியை நிறைவு செய்வதோடு ஜீவாவின் மறைவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை கண்டி எழுத்தாளர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்’’

# இலங்கை தேசமெங்கும் மகிழ்ச்சி பரவட்டும் தேசிய ஐக்கியத்தை கட்டி எழுப்புவோம்



## நாளை (14.01.2025) முகத்துவார மிஸ்பா ஜெபமிஷனரி ஆலயத்தில் மாபெரும் உபவாச ஒன்றுகூடல்

நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் வரவேண்டும். தம் அயலாரை நாம் நேசிப்பது போல அடுத்தவரது குற்றங்களையும் மறப்பது நல்ல பண்பு. நாம் செய்வது இன்னதென்று அறியாதவர்கள் இருக்கலாம். ஆனால், யாரையும் நியாயம் தீர்க்க அதிகாரம் எமக்கு இல்லை. மண்டியிட்டு மன்றாடி வேண்டியவர்கள் தாம். கிறிஸ்தவ மதம் யாரையும் வஞ்சிப்பதல்ல. வஞ்சம் தீர்ப்பதல்ல. நெஞ்சம் நிறைய தவறுகளை மன்னிப்பதோடு மறப்பதும் எமது பண்பு. அதனால் தான் நாட்டு நலனுக்காக நாம் ஒன்று கூடி பிரார்த்திக்க வேண்டிய நேரமாக இதனை நாம் எடுத்துக் கொள்கிறோம்.

எமது தேசிய ஐக்கியத்துக்கான கொழும்பு மூத்த போதகர் ஒன்றியம் சமாதானத்துக்கான அர்ப்பணிப்பில் ஈடுபட்டுள்ளது. கிறிஸ்தவ சமூகம் நாட்டுக்காக ஆற்ற வேண்டிய பணிகள் ஆராயப்பட்டு அதை அடையும் இலக்கை துணிவுடன் தொடர இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதம் நமக்கு அவசியமாகிறது. இயேசு கிறிஸ்து ஐக்கியத்தை வலியுறுத்தினார். அந்நியோன்யத்தை ஆதரித்தார். பாவங்களை மன்னிப்பவர் எமது இயேசு. அது மட்டுமன்றி, நாம் செய்யும் காரியங்கள் இன்னதென்று அறியாதிருப்போருக்காக அவர் இரக்கம் கொண்டவராக இருக்கின்றார். இது எமக்கெல்லாம் முன்மாதிரி.

கிறிஸ்தவ சமூகம் கறை படிந்த வரலாறுகள் மீளவும் உயிர்பெறாத வகையில் எமது ஜெபங்கள் நாட்டு மக்களை தாங்கும் என எதிர்பார்க்கிறோம். நாடு முழுவதும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் என்பது நிச்சயம்; எமது ஆண்டவர் நல்லவர்; வல்லவர்; வார்த்தையில் உண்மையுள்ளவர்; வாக்குத்தத்தம் மாறாதவர்; சகலரும் மன்னிப்புக்குரியவர்களாக மாற்றப்பட வேண்டும் என்பது இயேசுவின் சித்தம். எனவே, அவரது புனித இரத்தத்தினால் நாடு கழுவப்பட வேண்டும். இயேசுவின் பெயரால் ஒன்று கூடுவோம். அவரது திருவடி தொழுது அமைதி நாடுவோம். பிரார்த்தனை மூலம் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம். நாடும் வளம் பெறும்; வீடும் சிறக்கும். இலங்கை தேசத்தின் சமாதானத்தை நோக்கி முகத்துவாரம் மிஸ்பா ஜெபமிஷனரி ஆலயத்தின் தலைமைப் போதகர் வண. ஜெயம் சாரங்கபாணியின் தலைமையில் நாளை (14) காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை உபவாச ஜெப ஒன்றுகூடல் நடைபெறும்.

இவ்வொன்று கூடலில் கொழும்பு மூத்த போதகர் ஐக்கிய ஒன்றியக் குழு பெருமளவில் கலந்து கொள்ளவிருக்கின்றது. 2025ஆம் ஆண்டு இலங்கையை அதிசய விதமாகவும் அற்புதமாகவும் மாற்ற இயேசுகிறிஸ்து வல்லவராயிருக்கிறார். இன, மத பேதமின்றி அனைத்து இனமக்களும் இதில் கலந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள மூத்த போதகர் சங்கம் அழைப்பு விடுகின்றது. சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. பரி யோவான் (14:27) என்று கர்த்தரின் வாக்குத் தத்தம் இந்தப் புதுவருட காலத்தில் எம்மைத் திடப்படுத்துகிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்றொரு நம்பிக்கை இருக்கிறது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது. இது உலக சுழற்சியின் விளைவு.

ஆனால், காலத்தை ஆதாயப்படுத்த வேண்டியது அவசியம். அன்று காலத்தை வீணாக்கிய எருசலேமைப் பார்த்து இயேசு உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாய் இருக்குமே என்று கலங்கினார். (லூக்கா 19:42) ஓடி முடிந்த காலத்தில் நாம் பல்வேறு அனுபவங்களுக்கு முகம் கொடுத்திருக்கலாம். பல்லின மக்கள் வாழும் இந்த ஜனநாயக நாட்டில் வாழ்வது நமக்குப் பெருமையான விடயமே. ஆயினும், துயரங்கள், நெருக்கடிகள், சவால்கள் என்று எமது சமாதானம் குழம்பிப் போவதும் உண்டு. என் பின்னே வாருங்கள் (மத்தேயு 4:19) என்று கர்த்தரின் அழைப்பைப் புறக்கணிப்பதால் சாத்தான் பல்வேறு வழிகளிலும் எம்மைப் பயன்படுத்திக் கொள்கிறான். இதனால் நாம் சோர்வடைகின்றோம். காலத்தின் பிறப்பின் மேல் எதிர்பார்ப்பை விதைக்கின்றோம். கண்ணீர் துடைக்கப்படாதா என்று ஏங்குகிறோம்.

அதேநேரம், அடுத்தவர் மேல் பழியைப் போட்டுவிட்டு தப்ப நினைக்கிறோம். இங்கே தான் ஆண்டவரின் அடைக்கலம் தேவைப்படுகின்றது. ஏனெனில், உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக (யோவான் 14:1) என்று எமது மனமறிந்து ஆறுதல் தருபவர் அவர் மட்டுமே. இதற்காக எம்மிடமிருந்து அவர் எதனை எதிர்பார்க்கிறார்? ‘ஒரு மணி நேரமாவது என்னோடு கூட விழித்திருக்கக் கூடாதா..” (மத 26:40) என்று எமது சமாதானத்துக்கான அவர் இதயம் கலங்குகிறார். நாம் ஆண்டவரின் அழைப்புக்கு செவி கொடுப்போம். அதற்காக வேண்டி கொழும்பு மூத்த போதகர் ஐக்கிய ஒன்றியம் நாளை 14ஆம் திகதி உபவாச ஜெப ஒன்றுகூடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. தை பிறந்திருக்கும் தனிச்சூழலில் இனி இல்லை. இதய வேதனை என்பதை அநுபவித்து உணர அரியவாய்ப்பு. அனைவரும் இந்த ஜெப ஒன்றுகூடலில் பங்கு கொண்டு காலத்தை ஆதாயப்படுத்த ஐக்கியப்படுங்கள். நாட்டுக்கும் இங்கு வாழும் சகல இன சமூகங்களுக்கும் சமாதானம் கிடைத்திட விசுவாசத்தோடு ஜெபிப்போம். பூமியிலே நாங்கள் வாழ்கிற நாட்களையும் செலவழிக்கிற நேரங்களையும் கர்த்தர் கவனித்துக் கொண்டே இருக்கிறார். மறந்து போகாதீர்கள். இயேசுகிறிஸ்து எம்மை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!



**சவரிமுத்து தேவதாஸ்**
**ஊடக இணைப்பாளர்**

## இன்றைய நாளில்..

- **1815 – கண்டிப் போர்கள்: பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.**
- **1888 – தேசிய புவியியல் கழகம் வொஷிங்டனில் நிறுவப்பட்டது.**
- **1964 – கொல்கத்தாவில் இந்து-முஸ்லிம் கலவரம் மூண்டதில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.**
- **1993 – வேதி ஆயுத உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.**
- **2001 – எல் சல்வடோரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 800 பேர் உயிரிழந் தனர்.**

## நக்கல் நமசிவாயம்

***உதயங்க வீரதுங்கவின் சண்டித்தனத்தை பார்த்தீங்க தானே..***
***இப்பவே இப்படி என்றால் ராஜபக்ஷ ஆட்சியில் எப்படியெல்லாம் நடந்திருப்பார்கள்..!***



# கண்டி - கெலிஓயா அம்பரப்பொல பகுதியில் பாடசாலை மாணவியொருவர் கடத்தல்

## கடத்திச்சென்ற வேன் கைவிடப்பட்ட நிலையில் மீட்பு - சாரதி கைது

எம்.ஏ.அமீனுல்லா, எஸ்.கணேசன்





கண்டி, தவுலகல பிரதேசத்தில் பாடசாலை மாணவியொருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தவுலகல மற்றும் கம்பளை பொலிஸ் நிலையங்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

தனியார் வகுப்புக்குச் செல்வதற்காக தனது நண்பி ஒருவருடன் தவுலகல நகருக்குச் சென்றுகொண்டிருந்தபோது நேற்று முன்தினம் (11) காலை 7.15 மணியளவில் கறுப்பு நிற வேனில் வந்த சிலர் இந்தக் கடத்தலை மேற்கொண்டுள்ளனர்.

மாணவியை கடத்திச் சென்று மறைத்து வைத்த இளைஞன் முதலில் 50 இலட்சம் ரூபாவை மாணவியின் தந்தையான வர்த்தகரிடம் கப்பமாகக் கோரிய பின்னர் அதனை ரூ. 30 இலட்சமாகக் குறைத்துள்ளார். அதன் பின்னர் மாணவியின் தந்தைக்குச் சொந்தமான வேனைக் கேட்டு, 02 இலட்சம் வங்கியில் வரவு வைக்குமாறு மிரட்டியுள்ள நிலையில், அதற்குப் பதிலளித்த மாணவியின் தந்தை 50,000 ரூபாவை உரிய கணக்கில் வரவு வைத்துள்ளார்.

மேலும் இது தொடர்பில் அறியவருவதாவது, குறித்த கடத்தலை நடத்தியவர் மாணவியின் மைத்துனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மாணவி பாடசாலைச் சீருடை அணிந்து தனது தோழியுடன் வகுப்புக்குச் சென்று கொண்டிருந்தபோது, வழியில் நிறுத்தப்பட்ட வேனிலிருந்து கீழே இறங்கிய உறவினர் குறித்த மாணவியை வலுக்கட்டாயமாக வேனில் ஏற்றியுள்ளமை சி.சி. ரி.வி. கெமராக்களில் தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அப்போது, மாணவியை காப்பாற்றுவதற்காக வாலிபர் ஒருவர் வேனில் தொங்கிக்கொண்டு சுமார் 500 மீற்றர் தூரம் சென்று அவரைக் காப்பாற்ற முயற்சித்தபோதிலும், சந்தேக நபர் அவரை அடித்து வீழ்த்தியுள்ளார்.

இதேவேளை, பாடசாலை ஆசிரியரொருவர் அருகிலிருந்த மோட்டார் சைக்கிளில் வேனை சுமார் 20 கிலோ மீற்றர் தூரம் துரத்திச் சென்றுள்ளாரெனவும் கட்டுகஸ்தோட்டை நகரில் வைத்து அவர் வேனை தவறவிட்டதாகவும் பின்னர் பொலனறுவை நகருக்கருகில் கைவிடப்பட்ட நிலையில், குறித்த வேனை பொலிஸார் நேற்று முன்தினம் (11) பிற்பகல் மீட்டுள்ளனர்.

கார் வாடகைக்கு விடப்பட்ட இடத்தில் ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் பொருத்தப்பட்டிருந்ததால் வேனைக் கண்டுபிடிப்பது எளிதாக இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். மாணவி கடத்தப்பட்டபோது வேனை ஓட்டிச்சென்ற நபர் பொலனறுவையில் வேனை கைவிட்டு வீடு திரும்பும்போது தவுலகல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

19 வயதுடைய மாணவி, சந்தேக நபரின் தாயின் சகோதரரின் மகள் எனவும் அவருக்கு மகளைத் திருமணம் செய்து வைப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர், ஜப்பானில் சில காலமாக தொழில் செய்து வருவதாகவும் மாணவி தரப்பினருக்கு சந்தேக நபர் தரப்பில் விருப்பமில்லாத நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவியைக் கண்டுபிடித்த பின்னரே அவர் மூலம் பெறும் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த அனைத்து விபரங்கள் குறித்தும் தெளிவான தகவல்களை வெளியிட முடியுமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலனறுவை பிரதேசத்தில் குறித்த மாணவியைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் கண்டி பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவின் பணிப்புரையின் பேரில் தவுலகல மற்றும் கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளை சந்தித்த சாணக்கியன் எம்.பி.





சென்னையில் இடம்பெறும் 2025ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினத்தின் இறுதித் தினமான நேற்று (12) தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கண்காட்சியில் தமிழகத்தில் வாழும் புலம்பெயர் இலங்கை அகதிகளின் விற்பனையகங்களும் இடம்பெற்றிருந்தன.

அவர்களின் தொழில்துறை ஊக்கமானது மிகுந்த மனமகிழ்வை உண்டாக்கியது. இந்நிகழ்வில் பல காலமாக அகதிகளாக வாழும் எம்மவர்களை மற்றும் நீண்டகால நண்பர்களைச் சந்தித்ததுடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக இதன்போது கலந்துகொண்ட இரா. சாணக்கியன் தெரிவித்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மற்றும் அ.அடைக்கலநாதனும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் அறுவடை செய்யப்படும் உளுந்துக்கு உரிய விலை கிடைக்கவில்லை

## பிரதி விவசாயப் பணிப்பாளர் மாலினி முரளிதரன் தெரிவிப்பு

சிவகுமார் திவியா



வவுனியா மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் உளுந்துக்கு உரிய விலை கிடைக்கவில்லையென பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி மாலினி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

உளுந்து அறுவடை தொடர்பில் நேற்று (12) கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024-2025ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பெரும் போகத்தில் 5ஆயிரத்து 650 ஹெக்டேயர் அளவில் வவுனியா மாவட்டத்தில் உளுந்து செய்கைபண்ணப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது உளுந்து அறுவடையை மேற்கொள்கிறார்கள். அவர்களுக்கு தற்போது உரிய விலை கிடைக்கவில்லை என்பது குறையாகவுள்ளது. உண்மையில் அறுவடைக் காலத்தில் விற்பனைக்கு கொண்டு செல்லும்போது விலை குறைவாகத்தான் இருக்கும். உளுந்தை பத்திரமாக வண்டு மற்றும் பூச்சித் தாக்கம் இல்லாது பாதுகாக்க வேண்டும்.

விலை அதிகரிக்கும் காலங்களில் அதனை விற்பனை செய்ய வேண்டும். காற்று புகாவண்ணம் 300 கேச் தடிப்புள்ள பொலித்தீனில் பொதி செய்து வைத்திருக்க முடியும். அல்லது 05 லீற்றர் குடிநீர் வரும் போத்தலில் கூட உளுந்தைப் போட்டு பாதுகாப்பாக மூடி வைக்க முடியும். அரசாங்கம் உளுந்துக்கான விலை தொடர்பில் கவனஞ்செலுத்தி வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் வேர்க்கடலை சாப்பிட்ட ஒன்றரை வயதுக் குழந்தை பலி

## சுவாசக் குழாயில் கடலை சிக்கியதால் மரணம்

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று கச்சான் பருப்பு புரைக்கேறியதால் நேற்று (12) உயிரிழந்துள்ளது.

சுன்னாகம், ஐயனார் வீதி பகுதியைச் சேர்ந்த சசிதரன் டனியா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குழந்தை நேற்று முன்தினம் (11) கச்சான் சாப்பிட்டவேளை புரைக்கேறியது. பின்னர் குழந்தை உறங்கிவிட்டது. உறங்கிய குழந்தை நேற்று முன்தினம் இரவு எழுந்து வாந்தி எடுத்துவிட்டு அழுத நிலையில், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் நேற்று (12) அதிகாலை குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சுவாசக் குழாயில் வேர்க்கடலை சிக்கியதால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி அநுர

சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீன மக்கள் குடியரசுக்கு நாளை 14ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரையிலான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இவ்விஜயத்தின்போது ஜனாதிபதி ஷீ ஜின்பிங்குடன் பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு துறைகள் குறித்து இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதுடன், சீனப் பிரதமர் லீ சியாங் மற்றும் சீன தேசிய மக்கள் காங்கிரஸின் தற்போதைய நிலைக்குழுவின் தலைவர் ஜாஓ லெர்ஜி ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். ஜனாதிபதியின், சீன மக்கள் குடியரசுக்கான இவ்விஜயம் இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்தும்.

# பரிசுகள் வழங்குவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட அறுவர் கைது

புத்தளம் நிருபர்

புத்தளம் பகுதியில் பொதுமக்களிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதாகக் கூறி வங்கிக் கணக்கு அட்டைகளின் இரகசிய இலக்கத்தைப் பெற்று (OTP) பண மோசடியில் ஈடுபட்ட ஆறு இளைஞர்கள் நேற்று முன்தினம் (11) இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பெறுமதியான பரிசில்கள் தருவதாக ஏமாற்றி பணமோசடியில் ஈடுபட்டுள்ளதாக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய, புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், ஆறு இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள ஆறு பேரும் புத்தளம், பாலாவி மற்றும் கரம்பை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18 மற்றும் 22 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பணம் 06 கையடக்கத் தொலைபேசிகள், 09 வங்கி அட்டைகள், சிம் அட்டைகள் என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விசேட போக்குவரத்துச் சேவை

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மேலதிகமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கான 100 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

வழக்கமான பஸ் சேவைகளுக்கு மேலதிகமாக இந்த பஸ்கள் புறக்கோட்டை மத்திய பஸ்நிலையத்திலிருந்து ஹட்டன், பதுளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இயக்கப்படுமென்று இலங்கை போக்குவரத்துச் சபையின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், போதுமான தனியார் பஸ்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

# புத்தளம் - கற்பிட்டி கடற்பகுதியில் ரூ. 36 மில். பெறுமதியான கஞ்சா மீட்பு





ரஸீன் ரஸ்மின்

புத்தளம், கற்பிட்டி - கப்பலடி கடற்பகுதியிலிருந்து ஒரு தொகை கேரள கஞ்சா கடந்த வெள்ளிக்கிழமை (10) மாலை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

வடமேற்கு கடற்படைக் கட்டளையின் இலங்கை கடற்படை விஜயா நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட கரையோர ரோந்துக் கப்பல் நேற்று குறித்த கடற்பகுதியில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இதன்போது, குறித்த கடற்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கடலில் மூன்று பெரிய பொதிகள் மிதந்துகொண்டிருந்ததை அவதானித்த கடற்படையினர் அதனை பரிசோதனை செய்துள்ளனர்.

குறித்த மூன்று பொதிகளிலும் சிறிய பொதிகளாக அடைக்கப்பட்ட நிலையில் 30 சிறிய பொதிகளில் கேரளக் கஞ்சா இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா 90 கிலோ 45 கிராம் எனவும் அதன் சந்தைப் பெறுமதி 36 மில்லியனுக்கும் அதிக பெறுமதியுடையதென்றும் மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனை செய்யும் நோக்கில் கடல் மார்க்கமாகக் கடத்திவரப்பட்டுள்ள குறித்த கேரள கஞ்சா பொதிகளை கடற்படையினரின் கெடுபிடிகள் காரணமாக கடத்தல்காரர்கள் இவ்வாறு கடலில் கைவிட்டுச் சென்றிருக்கலாமெனத் தாம் சந்தேகிப்பதாகவும் கடற்படையினர் கூறினர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகளை மேலதிக விசாரணைக்காக தமது பொறுப்பில் வைத்திருப்பதாகவும் கடற்படையினர் மேலும் குறிப்பிட்டனர்.




வாகன ஏலத்திற்கு — கொட்டாவ

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| WP BIS-05xx | BAJAJ | CT 100 |
| WP BEM-07xx | BAJAJ | CT 100 |
| SG BIF-19xx | BAJAJ | CT 100 |
| SG BHG-25xx | BAJAJ | CT 100 |
| CP BGF-63xx | BAJAJ | DISCOVER 100 |
| WP BGO-68xx | BAJAJ | CT 100 |
| WP- BIT-74xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| WP BGE-77xx | HONDA | DIO SCV 110 |
| WP BGS-80xx | HONDA | DIO SCV 110 |
| WP BFO-87xx | HONDA | DIO SCV 110 |
| WP BDO-46xx | HONDA | DIO SCV 110 |
| WP BEP-37xx | HONDA | DIO SCV 110 |
| WP BAB-37xx | HONDA | DIO SCV 110 |
| WP BGK-00xx | HONDA | DIO SCV 110 |
| WP BIE-03xx | HONDA | DIO SCV 110 |
| WP BGM-06xx | HONDA | DIO SCV 110 |
| SP BHP-21xx | HONDA | DIO SCV 110 |
| WP BIR-18xx | HONDA | GRAZIA APPS |
| WP BGI-52xx | YAMAHA | RAY-ZR |
| WP BAK-98xx | YAMAHA | FZ-S |
| WP BHY-03xx | SUZUKI | BURGMAN |
| WP BGY-39xx | TVS | NTORQ |
| WP BHK-44xx | TVS | NTORQ |
| WP BIV-21xx | TVS | NTORQ |
| WP BJG-27xx | TVS | NTORQ |
| WP BIY-55xx | TVS | APACHE RTR |
| 301-27xx | MARUTI | S3308IN |

பார்வையிடுதல் கம்பனி வாகன வளாகத்தில்
2025,ஜனவரி15ஆம்,16ஆம் திகதி
(மு.ப.8.30மணி முதல் பி.ப.4.30வரை)

இலக்கம்.17/1, பின்ஹேன சந்தி, ஹொரண வீதி, கொட்டாவ

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

மோட்டார் சைக்கிள் விற்பனைதிகதி: 2025, ஜனவரி 17ஆம் திகதி காலை 10.30மணி

சுகாதர நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்துப்படுகின்றத

நிபந்தனைக்கு உட்பட்டது


விஸ்வா:—0774787096 விதுசர:—0774229302

துரிதஅழைப்பு:—0117308080 வட்ஸ்அப்:— 0710356125

A N ALGEWATHTHA AUCTIONEER

அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நால்வர் பதவியேற்பு



புதிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நால்வர் நேற்று (12) காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஆர்.எம்.எஸ்.ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத் பி.அபேகோன் மற்றும் எம்.எஸ்.கே.பி.விஜேரத்ன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் புதிய உயர் நீதிமன்ற நீதியரசர்களாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.

# உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் நாள் நிகழ்வில் சாணக்கியன் - சுமந்திரன் பங்கேற்பு





ஜனவரி 11 மற்றும் 12ஆம் திகதிகளில் தமிழ்நாட்டின் சென்னை வர்த்தக மையத்தில் 2025ஆம் ஆண்டின் நான்காவது உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

'எத்திசையும் தமிழனங்கே!' என்ற தலைப்பில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், 60 நாடுகளிலிருந்தும் 17 மாநிலங்களிலிருந்தும் பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் விசேட அழைப்பின் பேரில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும், சென்னை 2025ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினமானது



வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதில் நேற்று முன்தினம் (11) சென்னை ஹோட்டல் தாஜ் கோரமண்டலில் இடம்பெற்ற தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்வில் தமிழ் நாட்டரசாலும் மற்றும் தமிழக வர்த்தக சங்கத்தினராலும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியனும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனும் கௌரவிக்கப்பட்டார்கள்.




மலையக கலை இலக்கிய பேரவையின் செயலாளரும் கொழுந்து கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியருமான மறைந்த மலையக மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் அந்தனி ஜீவாவின் உடலுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன், சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் பெ.முத்துலிங்கம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா.அ இராமன் உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் பூதவுல் நேற்று (12) மாலை 3.30 மணிக்கு கிருலப்பனை பூராராம கிறிஸ்தவ மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (படங்கள் - கம்பளை நிருபர்)

# இந்திய மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக மீன்பிடித்தால் இலங்கையர்கள் பொழுதுபோக்கில் ஈடுபடுகிறோமா?

## யாழ். மீன்பிடி கூட்டுறவு சம்மேளனத்தின் பிரதிநிதி மகேசன் கேள்வி

*பு.கஜிந்தன்*

''இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வாழ்வாதாரத்துக்காக மீன்பிடியில் ஈடுபடுகின்றார்கள் என்றால் நாங்கள் பொழுது போக்குக்காகவா மீன்பிடியில் ஈடுபடுகின்றோம்?'' - என யாழ்ப்பாண மாவட்ட மீன்பிடி கூட்டுறவு சம்மேளனத்தின் பிரதிநிதி மகேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''தங்களுடைய மீனவர்கள் வாழ்வாதார நோக்கத்துக்காக எங்களுடைய கடல் எல்லைக்குள் வந்ததாகவும் அவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ஏறக்குறைய 30 வருடங்களாக இந்திய




மீனவர்களைக் கைதுசெய்வதும் விடுவதும் தொடர்கதையாகக் காணப்படுகின்றது.

அவர்கள் வாழ்வாதாரத்துக்காக கடலுக்கு வந்தால் நாங்கள் பொழுதுபோக்குக்காகவா கடலுக்குச் செல்கிறோம்? நாங்களும் வாழ்வாதாரத்துக்காகத் தான் கடற்றொழிலுக்குச் செல்கின்றோம். இந்திய இழுவைப் படகின் அட்டகாசத்தினால் நாங்கள் எமது கடலில் தொழில் செய்ய முடியவில்லை. தமிழக முதலமைச்சரே எமது மக்களின் வாழ்வுரிமையைப் பற்றியும் சற்றுச் சிந்தியுங்கள்.

உங்களுடைய கடற்பகுதியில் பாகிஸ்தான் மீனவர்களோ அல்லது சீன மீனவர்களோ வந்து மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை வாழ்வாதார அடிப்படையிலோ அல்லது மனிதாபிமான அடிப்படையிலோ நீங்கள் விடுதலை செய்வீர்களா? நிச்சயம் நீங்கள் அவர்களைக் கைதுசெய்வீர்கள். இன்றைக்கும் உங்கள் எல்லையில் நீங்கள் சண்டை செய்து கொண்டுதான் இருக்கின்றீர்கள். அதுபோல எங்களது எல்லைக்குள் நீங்கள் வரவேண்டாம்.

எங்களது வளங்களைச் சுரண்டிக்கொண்டு, வாழ்வாதாரம், மனிதாபிமானம் என்று பொய்களைக் கூறிக்கொண்டு எங்களது மக்களை நிர்க்கதியாக்குகின்றீர்கள். எனவே, உங்களது கடற்படையை வைத்து உங்களுடைய மீனவர்களை எல்லை தாண்ட விடாது கட்டுப்படுத்துங்கள் எங்களது வளங்களை நாங்கள் பாதுகாத்துக் கொள்கின்றோம்''- என்றார்.

# வருமானம் குறைந்த சமூகங்களை மேம்படுத்த சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் புதிய திட்டம்

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமையில் கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் குறைந்த வருமானம் கொண்ட சமூகங்களை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை செயற்படுத்த தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் முதல் கட்டம் 2025 - 2027ஆம் ஆண்டுக்குள் செயற்படுத்தப்படும். இதற்காக குறைந்த வருமானம் பெறுபவர்களைத் தேர்ந்தெடுப்பது, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் துணை நிறுவனங்களின் அரச அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் நாடளாவிய ரீதியிலான வேலைத் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறைந்த வருமானம் பெறுபவர்களை மேம்படுத்துவதற்கான திட்டம் பல துறைகளின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் ஆரம்ப கட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் 50 குடும்பங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி மன்றங்கள் பெறும் வருமானங்களை மக்களின் மேம்பாட்டுக்கு செலவு செய்யவேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்



*நெல்லியடி நிருபர்*

''உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானங்களை தமது பிரதேச மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட ஏனைய மேம்பாடுகளுக்கு செலவு செய்யவேண்டும். அதைவிடுத்து அதனை நிரந்தர வைப்பிலிட்டு சேர்த்து வைத்துக்கொண்டிருக்கக்கூடாது''- என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை மரக்கறி பொதுச் சந்தை கடந்த வெள்ளிக்கிழமை (10) திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகர சபையின் செயலர் திருமதி தாரணி கஜமுகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், ஒதுக்கப்படும் நிதியை உரிய காலத்தில் செலவு செய்து முடிப்பதென்பது எமக்குப் மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது. ஆனால், இந்தக் கட்டிடத்தை மிக நேர்த்தியாக உரிய காலத்தில் நிறைவேற்றிய ஒப்பந்தக்காரருக்கு நன்றி தெரிவித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தொடர்ந்து தனதுரையில், ''பௌதீக வளங்களின் முன்னேற்றம் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அதேபோன்று, தனித்து பௌதீக வளங்களின் முன்னேற்றம் மாத்திரம் அபிவிருத்தியாகிவிடாது. எங்களின் சேவையை மேம்படுத்தும்போதுதான் அபிவிருத்தி முழுமையடையும். எனவே, மக்களுக்கு



தரமான, அன்பான, விரைவான சேவையை வழங்க முன்வரவேண்டும்.

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் முன்னெடுக்கப்படும் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. அதைச் சிறப்பாக செயற்படுத்தவேண்டும். மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையை உருவாக்கவேண்டும்.

தற்போது எமக்குள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபையின் செயலர் ஆகியோர் இளையவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் உத்வேகத்துடனும் துடிப்புடனும் செயலாற்றுகின்றனர். இந்தப் பொதுச் சந்தைக்குரிய காணியை கொள்வனவு செய்து கட்டடம் அமைத்து இன்று மக்களுக்கு கையளிக்கின்ற சபையின் செயலரையும் பணியாளர்களையும் பாராட்டுகின்றேன். இதேபோன்று திறம்படப் பணியாற்றுவதுடன் எதிர்காலத்தில் இந்தப் பொதுச் சந்தையைப் பராமரிப்பதிலும்தான் இதன் வெற்றி தங்கியிருக்கின்றது''- என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் சத்தியசீலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பொ.சிறீவர்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புத்தளம் - முந்தல் தேங்காய் எண்ணெய் தயாரிப்பு ஆலையில் பணிபுரிந்த காவலாளி கொலை

## 13 இலட்சம் ரூபா பணமும் கொள்ளை



*ரஸீன் ரஸ்மின்*

புத்தளம் - முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்துளுஓயா பிரதேசத்திலுள்ள தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் ஆலையில் பணிபுரிந்த காவலாளியொருவர் நேற்று முன்தினம் (11) அதிகாலை கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விஜயகட்டுப்பொத்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சுராஜ் இந்திங்க (45 வயது) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் ஆலையின் மதில் ஊடாக வெள்ளிக்கிழமை இரவு உள்ளே நுழைந்த கொள்ளையர்கள், அங்கு இரவுநேர பாதுகாப்புக் கடமையிலிருந்த காவலாளியை கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்துவிட்டு, அலுவலகத்தில் இருந்த பணப் பெட்டகத்தையும் உடைத்து சுமார் 13 இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் ஆலையில் கடமைபுரியும் தொழிலாளர்களுக்கு அன்றைய தினம் வழங்கப்படவிருந்த சம்பளப் பணமே இவ்வாறு கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், இத்தாக்குதலில் மரணமானவரின் சடலம் அவர் இருந்த பாதுகாப்பு அறையிலிருந்து சுமார் 50 மீற்றருக்கப்பால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நபரின் சடலம் நீதவான் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸாரும் புத்தளம் பிராந்திய தடயவியல் பொலிஸாரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




மிஷன் டி விஷன் ஏற்பாட்டில் இலங்கையின் புகைப்படக் கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு கொழும்பு ஆமர் வீதியில் அமைந்துள்ள பிரைட்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம்(11) ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கையில் பல பகுதிகளிலிருந்தும் புகைப்படக் கலைஞர்கள் பங்கேற்றிருந்தமை சிறப்பம்சமாகும். இவ்விழாவில் முக்கிய நிகழ்வாக மூத்த (புகைப்பட வீடியோ) கலைஞர் ராமசாமி சம்பத்துக்கு அமைப்பின் தலைவர் பாலா, ஆலோசகர்கள் நியாஸ், ரட்ணம், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். (படங்கள்: எம்.நசார்)

# அம்பாறையில் ஆரம்பிக்கப்பட்ட கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தின் கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் நிந்தவூர் பிரதேச சபை வளாகத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.சிஹாபுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.ஆதம்பாவா, அஸ்ரப் தாஹீர் ஆகியோர் கலந்து கொண்டு கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

விசேட அதிதிகளாக நிந்தவூர் பிரதேச செயலாளர் அப்துல் லத்தீப், தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பொறுப்பாளர் சம்சுல் அலி, பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் எஸ்.எம்.ஆரீப் உட்பட பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவான விளக்கத்தையும் ஆதம்பாவா எம்.பி. வழங்கினார். இறுதியாக பாதைகள் மற்றும் வெற்று வளவுகளில் உள்ள குப்பைகூளங்களை அகற்றும் பணியையும் அதிதிகள் தொடக்கி வைத்தனர்.

# கட்டைபறிச்சான் தெற்கு இறால் பாலத்தை உடனடியாகப் புனரமைக்குமாறு கோரிக்கை

## உள்ளூராட்சி அமைச்சருக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடிதம்

(கனகராசா சரவணன்)

மூதூர் பிரதேச செயலர் பிரிவில் கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவில் கட்டைபறிச்சான் ஆற்றுக்குக் குறுக்காக உள்ள பாலத்தை உடனடியாகப் புனரமைக்குமாறு கோரி பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச்.அபயரத்னவுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மூதூர் பிரதேச செயலர் பிரிவில் கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவில் கட்டைபறிச்சான் ஆற்றுக்குக் குறுக்காக இவ் இறால்பாலம் அமைந்துள்ளது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமானதும் சுமார் 125 மீற்றர் நீளமானதுமான இப்பாலமானது கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்னர் கொங்கிரீட் குழாய்கள் பொருத்தப்பட்டு அமைக்கப்பட்டதாகும்.

மூதூரிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்லும் மிகப் பழமையானதும் அதிகளவு மக்களது பயன்பாட்டில் உள்ளதுமான பழைய மட்டக்களப்பு வீதியிலேயே இப்பாலம் அமைந்துள்ளது. சேருவில, தோப்பூர், பாட்டாளிபுரம், நல்லூர், மலைமுந்தல், பள்ளிக்குடியிருப்பு போன்ற கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல ஆயிரக்கணக்கானோர் தினமும் இப்பாலம் ஊடாகவே அடிக்கடி மூதூருக்கும் ஏனைய பல பகுதிகளுக்குமான பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கட்டைபறிச்சான், சேனையூர், கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள சந்தனவெட்டை, அறபாநகர், அம்மன்நகர், கணேசபுரம் ஆகிய இடங்களிலுள்ள நெல்வயல்கள், குளங்கள், சேனைப்பயிர்ச் செய்கை நிலங்கள் மற்றும் காட்டுப்பகுதிகளுக்குச் செல்லும் பாதையிலுள்ள மிக முக்கிய பாலமாகவும் கட்டைபறிச்சான், சேனையூர் பகுதி மக்கள் கிராமத்தை விட்டு வெளியேறுவதற்கான பிரதான பாதையாகவும், மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் சுமார் 3,000க்கும் அதிகமான மக்களது பயன்பாட்டிலுள்ள பொது மயானம் மற்றும் பொது விளையாட்டு மைதானம் ஆகியவற்றிற்குச் செல்லும் பிரதான வழியாகவும் இப்பாலம் அமைந்துள்ளது.

இவ்வாறான மிக முக்கியமான போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ள இவ் இறால் பாலமானது கடந்த 20 வருடங்களாகத் திருத்தப்படாத நிலையில் மோசமாகப் பாதிப்படைந்த நிலையிலுள்ளது. இதனூடாகப் பயணிக்கும் மக்களது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியளவுக்கு இப்பாலம் சிதைவடைந்த நிலையிலுள்ளது.

இப்பாலம் மிகவும் தாழ்வாக அமைக்கப்பட்டுள்ளதால் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காலங்களில் பாலத்துக்கு மேலாக சுமார் ஒன்றரை அடி உயரத்துக்கு ஆற்றுநீர் மட்டம் உயர்ந்து பாய்கின்றது. இதனால் விபத்துகள் அதிகம் இடம்பெறுவதுடன், இதனூடாகப் பயணிக்கும் மாணவர்கள் பாதுகாப்புக்கருதி அடிக்கடி பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது.

மேலும் கால்நடைகள் அதிகளவில் உயிரிழப்புகளைச் சந்தித்துள்ளன. விவசாயம், வியாபாரம் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகளும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது. ஒட்டுமொத்த மூதூர் பிரதேச மக்களதும் பொருளாதாரம், கல்வி, விவசாயம், வர்த்தகம் மற்றும் அரச தொழில் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இப்பாலத்தின் பயன்பாடு உள்ளது. மேற்படி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இப்பாலத்தை சிறந்த திட்டமிடலுடன் புனரமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகளை கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு நடவடிக்கைக்காக அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



விரதங்களில் சிறந்த விரதமாகக் கருதப்படும் சொர்க்க வாயில் வைகுண்ட ஏகாதசி விரத பூஜை மட்டக்களப்பு வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தில் வெகு சிறப்பாக வெள்ளிக்கிழமை(10) இரவு நடைபெற்றது. நான்கு சாம பூஜைகள் இடம்பெற்றன. இதன்போது கலை நிகழ்வுகளும் சமய சொற்பொழிவுகளும் பக்திப் பாமாலை எனும் இசை நிகழ்வுகளும் பஜனை நிகழ்வுகளும் இடம்பெற்றன. பூஜை நிகழ்வுகள் யாவும் நவக்கிரக பூஜா விஷ்ணு பூஜா சாச்சிநாத தேவேந்திர குருக்கள் தலைமையில் இடம்பெற்றன. (மட்டக்களப்பு செய்தியாளர்)

# தைத்திருநாளை கொண்டாடுவதற்கு தயாராகிவரும் மட்டக்களப்பு மக்கள்



(மட்டக்களப்பு செய்தியாளர்கள்)

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் தைத்திருநாளை கொண்டாடுவதற்கு மட்டக்களப்பு மாவட்ட மக்களும் தயாராகி வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களிலும் பொதுச்சந்தை பகுதிகளிலும் மக்கள் தங்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதை காணக்கூடியதாக இருக்கின்றது.

பொங்கலுக்குரிய பொருட்கள் மற்றும் உடைகள் கொள்வனவு செய்வதில் மக்கள் அதிகளவில் ஆர்வம் காட்டிவருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் பொதுச்சந்தை, மட்டக்களப்பு நகரம் ஆகிய பகுதிகளில் மக்கள் அதிகளவில் பொருட்கொள்வனவில் ஈடுபடுவதை காணமுடிந்தது.

மட்டக்களப்பு மாவட்ட பல பகுதிகளிலுமிருந்து பொதுமக்கள் வருகைதந்து பொருட்கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கான போக்குவரத்து வசதியை அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கமைவாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன.

மழை குறைந்துவருவதன் காரணமாக தைத்திருநாளை கொண்டாடுவதற்கு மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்துவருகின்றனர். தமக்கு வேண்டிய அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நேற்று மட்டக்களப்பு நகர சந்தைக்கு வருவதை காணக் கூடியதாக உள்ளது.

மட்டு. நகரின் பிரதான இடங்களில் தைப்பொங்கல் வியாபாரம் நண்பகலுக்குப் பிறகு முன்னெடுக்கப்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளதுடன் கடந்த வருடத்தை விட இம்முறை தைப்பொங்கல் வியாபாரம் சிறப்பாக உள்ளதாகவும் மழை காரணமாக சற்று பாதிக்கப்பட்டுள்ளபோதிலும் தற்போது மழையுடன் கூடிய கால நிலை சற்று ஓய்ந்துள்ளதினால் தற்போது வியாபாரம் சிறப்பாக இடம்பெறுவதாக மாவட்ட வீதியோர வியாபாரிகள் கருத்து தெரிவித்தனர்.

# ஓய்வுபெறும் பிரதம பொலிஸ் பரிசோதகர் றபீக் கௌரவிப்பு



(பாறுக் ஷிஹான்)

பொலிஸ் சேவையில் இணைந்து சுமார் 37 வருடங்களாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பணியாற்றி பல பதவியுயர்வுகளையும் பெற்று இறுதியாக கல்முனை பொலிஸ் நிலைய பதில் தலைமைப் பொலிஸ் பரிசோதகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் மீரா லெப்பை றபீக்கை கௌரவித்து வழியனுப்பும் நிகழ்வு சனிக்கிழமை(11) நடைபெற்றது.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையில் அல்-ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலாநிதி கே.அஜித் றோஹணவும் கௌரவ அதிதிகளாக அம்பாறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே.பண்டார, அம்பாறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் -1 சேனாரத்னவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது இவரின் சேவையைப் பாராட்டி அதிகாரிகளாலும் பொது மக்களாலும் பொன்னாடை போர்த்தி ஞாபகச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வின்போது பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் றபீக்கின் குடும்ப உறவினர்கள், சாய்ந்தமருது உலமாசபைத் தலைவர், வர்த்தகர்கள், ஊர்ப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# 65ஆவது வயதில் சட்டமாணி பட்டம் பெற்று சாதனை



(காரைதீவு செய்தியாளர்)

காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரும் ஆசிரிய ஆலோசகருமான மயில்வாகனம் இரவீந்திரன் தனது 65ஆவது வயதில் மூன்றாவது பட்டமாக சட்டமாணி பட்டத்தை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் பிரதி அதிபராகவும் விஷ்ணு வித்தியாலய அதிபராகவும் பணியாற்றி பின்னர் கல்முனை கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகத் தனது 60ஆவது வயதில் ஓய்வு பெற்றார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் சட்டமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உள்வாரியாக கலைமாணி பட்டத்தையும் பொருளியல் முதுமாணிப்பட்டத்தையும் ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொக்கொட்டிச்சோலை பொதுச்சந்தை மக்கள் பாவனைக்காக கையளிப்பு



(வாழைச்சேனை செய்தியாளர்)

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வரும் கொக்கொட்டிச்சோலை பொதுச் சந்தையானது கடந்த நான்கு வருடங்களாக இயங்காத நிலையில் காணப்பட்டு வந்தது.

கொட்டும் மழையிலும் நேற்று கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தினூடாக புது வருடத்தை முன்னிட்டு இந்த பொதுச் சந்தை பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் கையளிக்கப்பட்டது.

அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் திட்டத்தின் ஒரு கட்டமாக சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் பொதுச் சந்தை பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் கையளிக்கப்பட்டது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக நிரந்தரமான ஒரு பொதுச் சந்தை வசதியின்றி மக்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இவ்விடயம் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவின் கவனத்துக்கு பொது மக்கள் கொண்டு சென்றதையடுத்து தமிழர்களின் முக்கிய விழாக்களில் ஒன்றான தைப்பொங்கல் விழாவின்போது தேவையான அத்தியாவசிய பொருட்களை மிகவும் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்டு இப்பொதுச்சந்தை பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



நற்பிட்டிமுனை அல்-கரீம் பௌண்டேஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நற்பிட்டிமுனை பிரதேசத்திலுள்ள சுமார் ஐம்பது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது நிறுவனத்தின் தவிசாளரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளருமான சட்டத்தரணி சீ.எம்.ஹலீம் பிரதம அதிதியாகவும் பொதுச் செயலாளர் யூ.எல்.எம்.பாயீஸ் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர். (கோணாவத்தை செய்தியாளர்)

# ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காமசுவாமி ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு



(குருக்கள்மடம் செய்தியாளர்)

மட்டக்களப்பு, குருக்கள் மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காமசுவாமி ஆலயத்தில் பிராந்திய சிவசங்கரி திருமுறை ஓதுவார் சங்கத்தினரால் மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவாசக முற்றோதல் நிகழ்வு சனிக்கிழமை (11) நடைபெற்றது.

அன்றையதினம் காலை ஸ்ரீலஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமிக்கு விசேட பூஜை வழிபாடுகள் வசந்த மண்டபத்தில் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாணிக்க வாசகர் சுவாமிகளின் திருவுருவத்துக்கு ஆராதனை வழிபாடு இடம்பெற்றது.

இதனைத்தொடர்ந்து மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகதிருப்பதிகம் அடியார்களால் ஓதப்பட்டது. மார்கழி மாதத்தின் சிறப்பு வாய்ந்த விரதங்களுள் ஒன்றாகக் காணப்படும் திருவெம்பாவை விரதத்தின் ஆருத்ரா தரிசனம் எனப்படும் திருவாதிரை தீர்த்த உற்சவத்துக்கு முதல் திருவெம்பாவை காலத்தில் திருவாசகமுற்றோதல் ஓதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகள் யாவும் மட்டக்களப்பு குருக்கள் மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக் கதிர்காம ஆலயப்பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் ஆலய பிரதம குரு சிவகரன் குருவினால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மின்விளக்கின்றி இருளில் மூழ்கும் காரைதீவு - மாவடிப்பள்ளி

## பிரதான வீதி: பொதுமக்கள் சிரமம்



(பாறுக் ஷிஹான்)

காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட அம்பாறை - மாவடிப்பள்ளி பிரதான வீதியில் அமைந்துள்ள மின்விளக்குகள் பல நாட்களாக ஒளிராமை காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் அடைமழை ஆரம்பித்துள்ள நிலையில், இப்பகுதியில் இவ்வாறு இருளில் மூழ்குவதால் வீதியில் செல்லும் வாகனங்கள் உட்பட பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும் குறித்த அம்பாறை - காரைதீவு - மாவடிப்பள்ளி பிரதான வீதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 06 மாணவர்கள் உட்பட எட்டுப் பேர் நீரில் மூழ்கி மரணமானதும் குறிப்பிடத்தக்கது.

இது தவிர, இப்பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் காணப்படுவதனால் மாவடிப்பள்ளி பெரியபாலம் முதல் காரைதீவு முச்சந்தி வரையிலுள்ள பிரயாணிகள் அவலங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆனால், பெரிய பாலம் தொடக்கம் மாவடிப்பள்ளி சியாரம் வரையில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து ஒளிந்த பின் மீண்டும் இணைப்பு துண்டிக்கப்பட்டு ஒளிராமல் பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

மழை அதிகரிக்கும்போது வீதிக்கு மேல் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுவதனால் பாம்பு, முதலை, ஆமை போன்றவைகளின் அச்சுறுத்தலும் இங்கு ஏற்படுகின்றது. எனவே, இவ்வீதியின் மின்விளக்குகள் தொடர்ந்தும் ஒளிர்வதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுதலை செய்ய வேண்டும்

## மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிநேசன்





**(வீரமுனை செய்தியாளர்)**

கொடிய பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் எமது பத்து தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படவேண்டும். நீண்டகாலமாக சிறைச்சாலையில் கழித்துவிட்டார்கள். இருக்கும் காலத்திலாவது தமது உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்கு மாற்றத்தை உருவாக்கப்போவதாகக் கூறும் புதிய அரசாங்கம் அதனைச் செய்யவேண்டும். - என இலங்கை தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார். மேலும், கடந்த ஆட்சிக்காலத்தில் படுகொலையாளிகள் கூட பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலைசெய்யப்பட்டிருந்த நிலையில், தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடியவர்களை ஏன் விடுதலைசெய்யக்கூடாது எனவும் கேள்வியெழுப்பினார்.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு,கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துப் போராட்டமானது சனிக்கிழமை(11) கிழக்கின் மட்டக்களப்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளும் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு பிரதான பஸ்நிலையத்தில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் இ.செல்வநாதன் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், மாவட்ட அமைப்பாளர் குககுமார், சிவில் சமூக செயற்பாட்டாளர் எஸ்.சிவயோகநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தின்போது மழைக்கு மத்தியிலும் பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் கையெழுத்துப் போராட்டத்தில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன்போது கருத்துத் தெரிவித்த சிறிநேசன் எம்.பி.,

''பல ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்ற எமது விடுதலைக்காகப் போராடிய தமிழ் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்கின்ற அறவழிப்போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றனர். பயங்கரவாத தடைச்சட்டம் என்னும் பேரில் மிக மோசமான மனிதகுலத்துக்கு எதிரான சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இதன்மூலம் அப்பாவிகளைக் கூட பயங்கரவாதிகள் என்ற பார்வைக்குட்படுத்தும் மிக மோசமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது ஆட்சிக்குவந்த அரசாங்கம் இந்தச் சட்டத்தை நீக்குவோம் என்னும் உத்தரவாதத்தையடுத்தும்கூட இன்னும் அந்தப் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை.

இந்த நிலையில், இந்தக் கொடிய பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் எமது பத்து தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் விரைவாக விடுதலைசெய்யப்படவேண்டும். இவர்கள் நீண்டகாலமாக சிறைச்சாலையில் வாழ்நாளைக் கழித்துவிட்டார்கள். இருக்கும் காலத்திலாவது தமது உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்கு மாற்றத்தை உருவாக்கப்போவதாகக் கூறும் புதிய அரசாங்கம் அதனைச் செய்யவேண்டும். நாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்தபோது இந்த தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தோம். சட்ட மா அதிபருடன் பேசி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை மேற்கொள்வோம் என்று ஜனாதிபதி எம்மிடம் கூறியிருந்தார்.

தாமதப்படுத்தாமல் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதன் மூலம் நீங்கள் பாரபட்சமற்றவர்கள், இனவாதிகள் அல்ல என்பதை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளீர்கள். இந்தக் கையெழுத்துப் போராட்டம் என்பது எந்தவித வன்முறை சார்ந்த விடயம் அல்ல. அஹிம்சைவழி சார்ந்த ஜனநாயக வழிப்போராட்டமாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடியவர்கள். தமிழர்களின் உரிமைக்காகப் போராடியவர்கள். அந்தக் கைதிகளை அரசாங்கம் விடுதலை செய்யவேண்டும். கடந்த காலத்தில் மிக மோசமான கொலைக்குற்றவாளிகளைக் கூட பொதுமன்னிப்பின் அடிப்படையில் கடந்தகால அரசுகள் விடுதலை செய்திருந்தன.

ஏன் விடுதலைக்காகப் போராடியவர்களை விடுதலை செய்யக்கூடாது என்பதைக் கேட்க விரும்புகின்றோம். தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி கூட ஒரு காலத்தில் புரட்சிகரமான மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக ஆயுதம் ஏந்திப் போராடியது. அக்கட்சிக்கு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை விளங்கிக்கொள்ள அதிகநாட்கள் தேவையில்லை. ஆகவே, தமது சமத்துவ உரிமைக்காகப் போராடிய தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலைசெய்து அவர்களின் குடும்பங்களுடன் இணைந்து வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

# அம்பாறை மாவட்டத்தில் பலத்த இடி மின்னலுடன் கூடிய மழை வீழ்ச்சி

**(ஆலையடிவேம்பு செய்தியாளர்)**



அம்பாறை மாவட்டத்திலும் சில தினங்களாகப் பலத்த மழை பெய்து வருகின்றது. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பலத்த இடி மின்னலுடன் கூடிய மழைவீழ்ச்சி அதிகரித்துள்ளது.

இதனால் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் பல வீதிகளும் தாழ்நிலப்பிரதேசங்களும் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தைப்பொங்கலைக் கொண்டாடுவதற்குத் தயாரான தமிழ் மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அன்றாட தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சந்தையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலைக்கும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். மழை வீழ்ச்சி தொடர்ந்தால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது.

இதேநேரம், கால்நடைகளின் நடமாட்டம் வீதிகளில் காணப்படுவதால் பாதசாரிகளும் வாகன ஓட்டுனர்களும் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலையை எதிர்கொண்டுள்ளனர். இது இவ்வாறிருக்க, மழைகாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு முறையற்ற வடிகான் அமைப்பின்மையே காரணமெனவும் பொதுமக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

ஆகவே, எதிர்வரும் காலத்தில் ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கு முறையான வரைபடத்துடனான வடிகான்கள் அமைக்கப்படுவது அவசியமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# இடைநடுவில் சேதமடைந்து காணப்படும் வீதியை புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

**(கிண்ணியா செய்தியாளர்)**



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியிலுள்ள தாயிப் நகர் கோயிலடி- வைத்தியசாலை வீதி இடைநடுவில் சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த வீதியானது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கமூடாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

குறித்த வீதியானது கார்ப்பட் இடப்பட்ட போதும் ஒரு பகுதியில் பாரிய குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. இதனால் இவ்வீதி அண்மையில் ஏற்பட்ட கன மழையால் உடைந்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வீதியூடாக போக்குவரத்துச் செய்வதில் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

சுமார் 04 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இவ் வீதியை தினமும் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், அரச ஊழியர்கள் உட்படப் பலரும் பயன்படுத்தி வருகின்றனர். கார்ப்பட் இடப்பட்ட போதிலும் திட்டமிடப்படாத அபிவிருத்தியால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக மேற்கொள்ளப்பட்ட தம்பலகாமம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தம்பலகாமம் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எச்.தாலிப் அலியால் குறித்த வீதி தொடர்பில் முன்வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் ஒருவர், குறித்த வீதியில் சிறிய பாலமொன்று அமைக்கப்படல் வேண்டும் என்றார். இருந்தபோதிலும், பல வருடகாலமாக உரிய சபை பொடுபோக்காகக் காணப்படுவது வருத்தமளிப்பதுடன் இதனை புதிய தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் விரைவில் பூரணமாக திறம்பட செய்து தரவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



**கிண்ணியா பிரதேசத்தில் தேவையான 50 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வு சனிக்கிழமை(11) மாலை கிண்ணியா விஷன் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.சைபுள்ளாஹ் தலைமையில் விஷன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கொழும்பு மேமன் சங்கத்தின் ஒத்துழைப்புடன் கிண்ணியா விஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிண்ணியா தள வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ஏ.எம்.எம்.ஜிப்ரி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கண்ணாடிகளை வழங்கி வைத்தார். (சீனக்குடா செய்தியாளர்)**

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு நற்பணியில் திருகோணமலை இளைஞர்கள்

**(சீனக்குடா செய்தியாளர்)**




தூய்மையான மற்றும் பசுமையான எதிர்காலத்தை நோக்கி ஒரு படி என்ற தொனிப் பொருளில் கிண்ணியா - மட்டக்களப்பு வீதி பிரதான கடற்கரையை சுத்தப்படுத்தி, மரம் நடும் நிகழ்வு சனிக்கிழமை (11) இடம்பெற்றது.

இந்நிகழ்வு கிண்ணியா நகர சபைச் செயலாளர் எம்.கே.அனீஸின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் எலயன்ஸ் டெவலப்மன்ட் ட்ரஸ்ட் (ADT) நிறுவனங்களின் அனுசரணையில் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர்களின் சமூக ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நற்பணி கவ்சோ (GAFSO) என்ற தொண்டு நிறுவனத்தினால், இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடல் மாசுபாடு மற்றும் காடழிப்பு ஆகியவற்றால் ஏற்படும் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ள சமூக உறுப்பினர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்போது, தன்னார்வத் தொண்டர்கள் கடற்கரையிலிருந்து பிளாஸ்ரிக், கண்ணாடி மற்றும் பிற கழிவுப்பொருட்களை அகற்றி, கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கவும் சுத்தமான, பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தவும் பங்களிப்பைச் செய்தனர்.

மேலும், இந்தப் பகுதியில் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்தவும் காற்றின் தரத்தை மேம்படுத்தவும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்த்துப் போராடவும் மரக்கன்றுகளும் நடப்பட்டன. கவ்சோவின் திட்டப் பணிப்பாளர் ஏ.ஜே. காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கள உத்தியோகத்தர்கள் கே.எவ்.மதீனா, எஸ்.சுமன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அரிசி விலையை அதிகரித்து விற்பனை செய்தவருக்கெதிராக சட்ட நடவடிக்கை



**(கிண்ணியா செய்தியாளர்)**

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு விசேட சுற்றிவளைப்பொன்றை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை(12) திருகோணமலையில் மேற்கொண்டிருந்தனர்.

திருகோணமலை நகரில் அரிசி விலையை அதிகரித்து விற்பனை செய்த இரு கடைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒரு கடையில் சிவப்பு அரிசி 280 ஆகும். இன்னொரு கடையில் வெள்ளைப்பச்சை அரிசி 270 ஆகும். விற்பனை செய்யப்படுவதை உறுதிப்படுத்திய பின்பு இரு கடைகளுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் திருகோணமலை மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆகக் குறைந்தது ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த நேரிடலாமென நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# இறக்காமம் வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பில் கூட்டம்

**(மாளிகைக்காடு செய்தியாளர்)**



இறக்காமம் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், இறக்காமம் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் ஜெசிந்தன் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலையின் விடுதிகள் உள்ளிட்ட சில பிரிவுகளுக்கும் விஜயம் செய்து பார்வையிட்ட பணிப்பாளர், வைத்தியசாலையின் தற்போதைய தேவைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினால் முன்வைக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டதுடன் அத்தியாவசிய தேவைகளை உடன் நிவர்த்தி செய்து தருவதாகவும் பணிப்பாளர் உறுதியளித்தார்.

# வாய்ச்சுகாதார சேவையை மேம்படுத்த மருத்துவ உபகரணம் வழங்கிவைப்பு



**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

கல்முனைப் பிராந்திய வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் வாய்ச் சுகாதாரப் பிரிவுகளின் சேவையை மேம்படுத்தும் பொருட்டு, குறித்த பிரிவுகளுக்கு பற்சிகிச்சை மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குறித்த உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மருதமுனை, அட்டாளைச்சேனை, இறக்காமம், அன்னமலை, ஒலுவில் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளின் வாய்ச் சுகாதாரப் பிரிவுகளுக்கும் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை ஸாஹிரா கல்லூரி என்பவற்றின் பற்சிகிச்சை நிலையங்களுக்கும் குறித்த மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிராந்திய வாய்ச் சுகாதாரப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் யூ.ஹபீப் முஹம்மட் உள்ளிட்ட பிரிவுத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிரமதானப் பணி: சிறைக்கைதிகளும் பங்கேற்பு



**(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சிந்தனையில் உதித்த கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகமாக மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைக் கைதிகளினால் ஞாயிற்றுக்கிழமை(12) காலை சிரமதான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம ஜெயிலர் உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறைக் கைதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் என்பன பூரண ஒத்துழைப்பை நல்கியிருந்தன. சிறைச்சாலைச் சுற்றாடல், ஆணைப்பந்தி முருகன் கோயில் பிரதேசம் மற்றும் ஆஸ்பத்திரி வீதி உட்பட பல பகுதிகள் இதன்மூலம் தூய்மைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
businessthamilan@gmail.com

## பணிப்பாளர் சபையின் புதிய தலைவர் பிஸ்வ பிரகாஷ் மிஸ்ராவை வரவேற்கும் AIA ஸ்ரீலங்கா நிறுவனம்





இலங்கை காப்பீட்டு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கமைவாக ஜனவரி 2025 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பணிப்பாளர் சபையின் புதிய தலைவராக பிஸ்வ பிரகாஷ் மிஸ்ரா நியமிக்கப்பட்டதை AIA ஸ்ரீலங்கா மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது.

2013 முதல் AIA குழுமத்தின் தலைமைத்துவக் குழுவில் உறுப்பினராக இருக்கும் பிஸ்வா, இந்தப் பணிக்கு ஏராளமான அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் கொண்டு வருகின்றார். AIA குழும நிர்வாகக் குழுவின் ஒரு பகுதியாக அவர் குழுமத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி மற்றும் ஆயுள் செயற்பாட்டு அதிகாரியாகவும் உள்ளார். நியூசிலாந்தில் இயங்கும் குழுவின் வணிகத்துக்கும் பிஸ்வா பொறுப்பானவர் மட்டுமன்றி,குழுமத்துக்குள் உள்ள பல்வேறு நிறுவனங்களின் இயக்குநராகவும் உள்ளார். காப்பீட்டுத் துறையைப் பற்றிய ஆழமான புரிதலுடன் கூடிய அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப நிபுணரான அவர், குழு முழுவதும் தொழில்நுட்பம், டிஜிட்டல் மற்றும் பகுப்பாய்வு மாற்றம்,செயற்பாட்டு சிறப்பை இயக்குவதில் வலுவான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பல்வேறு ஆசிய சந்தைகளில் 25 ஆண்டுகளுக்கும் மேலான தனது பணிக்காலத்தில் சிக்கலான, பல-சந்தை தகவல் தொழில்நுட்ப (IT) குழுக்களை அவர் வெற்றிகரமாக நிர்வகித்துள்ளார். சிக்கலான வணிகச் சூழல்களுக்குச் செல்வதற்கும் வெளிப்புறப் பங்குதாரர் உறவுகளை திறம்பட நிர்வகிப்பதற்கும் அவர் தனது திறனை வெளிப்படுத்தி உரிய விடாமுயற்சி, இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

ஒரு தொழில் காப்பீட்டு தொழில்நுட்ப நிபுணராக இருப்பதால் உற்பத்தி, விநியோகம் மற்றும் டிஜிட்டல் உள்ளிட்ட காப்பீட்டு மதிப்புச் சங்கிலியை நன்கு அறிந்தவர். அவர் ஒரு காப்பீட்டு நிறுவன கலைஞர் மற்றும் பல நிறுவனங்களில் (IT) தளங்களை வெற்றிகரமாக மாற்றியுள்ளார்.

ஹொங்கொங், தாய்வான், தென் கொரியா, இந்தியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், வியட்நாம் மற்றும் சீனா உள்ளிட்ட பல ஆசிய-பசுபிக் சந்தைகளில் பல்வேறு குழுக்களுடன் அவர் வெற்றிகரமாகப் பணியாற்றியுள்ளார்.

## மதிப்பீட்டுத் தரவரிசையின் முதல் 10 நிறுவனங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ள APSEZ



2024ஆம் ஆண்டுக்கான S&P உலகளாவிய பெருநிறுவன நிலைத்தன்மை மதிப்பீட்டு தரவரிசையில் (CSA), அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டல லிமிட்டெட் (APSEZ) 100க்கு 68 மதிப்பெண்களுடன் உலகளாவிய ரீதியாக முதல் 10 போக்குவரத்து மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு நிறுவனங்களில் ஒன்றாகத் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட மூன்று புள்ளிகளால் முன்னேற்றம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2023ஆம் ஆண்டில் 96ஆவது சதவீதமாக இருந்த APSEZ, தற்போது இந்தத் துறையில் 97★ஆவது சதவீதத்துக்கு முன்னேறியுள்ளது.

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, APSEZ சுற்றுச்சூழல் பரிமாணத்தில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. வெளிப்படைத்தன்மை மற்றும் அறிக்கையிடல், பொருட் தரம், விநியோகச் சங்கிலி முகாமைத்துவம், தகவல் பாதுகாப்பு/இணையப் பாதுகாப்பு மற்றும் அமைப்பு இருப்பு, வாடிக்கையாளர் உறவுகள் உள்ளிட்ட சமூக, ஆளுகை மற்றும் பொருளாதார பரிமாணங்களில் பல அளவுகோல்களில் இது அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.

"பொறுப்பான வணிக நடைமுறைகள் புதுமை மற்றும் நீண்டகால வெற்றிக்கு வழிகோலும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். சமீபத்திய அங்கீகாரம், நிலைத்தன்மை மற்றும் பெருநிறுவனப் பொறுப்புக்கான எங்கள் உறுதிப்பாட்டை மட்டுமே பிரதிபலிக்கிறது. அனைத்து செயற்பாடுகளிலும் நிலைத்தன்மையை ஒருங்கிணைப்பதில் எங்கள் குழுவின் அர்ப்பணிப்பு, இந்தச் சாதனைக்கு முக்கிய காரணி ஆகும். 2040ஆம் ஆண்டுக்குள் நிகர பூச்சியத்தை அடைவதற்கான எங்கள் இலக்கை அடைய நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" -என்று APSEZஇன் முழுநேர இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி அஸ்வானி குப்தா கூறினார்.

மேலதிக தகவலுக்கு, www.adaniports.comஐப் பார்வையிடவும்.

## 'UPlay with Upay' போட்டியுடன் பணியாட்களை வலுவூட்டும் UPay



SDB வங்கியினால் வலுவூட்டப்படும் டிஜிட்டல் வொலட்டான UPay ஆனது, வங்கியின் புத்தாக்கமான UPay டிஜிட்டல் வொலட்டுடன் வங்கியின் பணியாட்களது அறிவு மற்றும் ஈடுபாட்டை வளப்படுத்துவதற்கும் வலுப்படுத் துவதற்குமான 'UPay with Upay' உள்ளக பணியாட்களுக்கான போட்டியை சமீபத்தில் நடத்தியது. டிஜிட்டல் சிறப்பை நோக்கிய வங்கியின் பயணத்தில் முன்னணி டிஜிட்டல் கொடுப்பனவுத் தீர்வு உற்பத்தியொன்றாக UPay இனை மூலோபாய ரீதியில் நிலைப்ப டுத்துகின்ற அதேவேளை, இவ்வுள்ளகப் போட்டியா னது குழு மனப்பான்மையையும் புத்தாக்கத்தையும் சிறப்பித்தது. இப்போட்டி யானது தொடர்ச்சியான கற்றல் மற்றும் அபிவிருத்தி கலாசாரமொன்றை உருவாக்குவ தற்கு வங்கியின் அர்ப்பணிப்பை அழுந்தக்கூறுவதாக வும் அதற்கு பங்களிப்பதாகவும் அமைந்திருந் தது.

இப்போட்டியானது UPay செயலியின் மேம்படுத்தப்பட்ட அம்சங்களை வெளிப்ப டுத்தும் அதேவேளை, ஊழியர்கள் கற்றுக் கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கு மேலும் வினைத்திறனாக சேவையாற்றுவதற் கும் வலுப்படுத்துமாறு அதன் முழுமையான அறிவை அவர்களுக்கு வழங்கும் முகமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. இத்துவக்கமானது நிதிப் பரிமாற்றம், விலைச்சிட்டைக் கொடுப்பனவுகள் மற்றும் QR கொடுப்பனவுகள் போன்ற செயலி பயனாளர் நட்பு அம்சங்களுடன் பழகுவதை வளப்படுத்துவதற்கும் அதன் பிரபல்யத்தை மேம்படுத்தும் அதேவேளை, செயலியின் பதிவிறக்கம், பதிவுசெய்தல், உள்ளக மற்றும் வெளியகமெனும் இரண்டிலுமான அனைத்தளாவிய ஈடுபாட்டை நகர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

## 2ஆவது HSBC Ceylon Literary and Arts Festival நிகழ்வு




### கொழும்பு பொது நூலகத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை அறிவிக்கும் வகையில் ஜனவரி 17-19ஆம் திகதிகளில் 32 தனித்துவமான அமர்வுகள்

2ஆவது தடவையாக இடம்பெறவுள்ள HSBC Ceylon Literary & Arts Festival நிகழ்வானது இலங்கையில் கலைகள் மற்றும் கலாசாரம் குறித்த தனது நோக்கங்களை மேலும் மேம்படுத்தும் வண்ணம் இடம்பெறவுள்ளது. 100 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க கொழும்பு பொது நூலகத்தில் மேம்படுத்தப்பட்ட இடத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த நூற்றாண்டு நிறைவுக் கொண்டாட்டங்களின் அடையாளமாக ஜனவரி 17 முதல் 19 வரை 50 க்கும் மேற்பட்ட புகழ்பூத்த எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் பங்குபற்றும் 32 க்கும் மேற்பட்ட அமர்வுகள் இடம்பெறவுள்ளன. பிரசித்திபெற்ற இலக்கியவாதியான மித்தா கபூரின் நிபுணத்துவத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கலாசார சாதனை மைல்கல்லானது Pulitzer பரிசு வெற்றியாளர்கள், Gratiaen பரிசைப் பெற்றவர்கள் மற்றும் அரச விருது பெற்றவர்கள் அடங்கலாக பிரசித்தி பெற்ற சர்வதேச மற்றும் உள்நாட்டு பேச்சாளர்களால் அலங்கரிக்கப்படவுள்ளது. மூன்று தினங்களாக இடம்பெறும் இந்நிகழ்வில் செயலமர்வுகள், குழுநிலைக் கலந்துரையாடல்கள், படைப்பாக்கத்திறன் அமர்வுகள் என இலக்கியம், கலை, திரைப்படம் மற்றும் இளைஞர் மேம்பாடு குறித்த பல்வகைப்பட்ட அம்சங்கள் அடங்கியுள்ளதுடன், கலாசார பரிமாற்றத்தில் செழுமையான பிணைப்பைத் தோற்றுவிக்கின்றது.

இக்கொண்டாட்ட நிகழ்வு குறித்து Ceylon Literary & Arts Festival பணிப்பாளர் அஜய் வீர் சிங் கருத்து தெரிவிக்கையில், "குறிப்பாக இலக்கியத்தின் மீது விசேட கவனஞ்செலுத்தியவாறு, கலைகள் மற்றும் கலாசாரத்துக்கான மேடையாகத் திகழ வேண்டும் என்பதே இந்தக் கொண்டாட்ட நிகழ்வின் ஒட்டுமொத்த இலக்கு. இலங்கையின் மென் ஆற்றலைக் கட்டியெழுப்பி, மேம்படுத்தும் ஆணையை இந்த மேடை கொண்டுள்ளது. சர்வதேச அரங்கத்தினர் மத்தியில் இலங்கை மீது கொண்ட நேர்பார்வையையும் இது வலுப்படுத்துகிறது. இளைஞர்,யுவதிகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கலைகள் மற்றும் கலாசாரத்தில் அடுத்த தலைமுறையை ஈடுபடுத்த நாம் விரும்புகின்றோம். இதன் மூலமாக படைப்பாக்கத்துறைகளில் வாய்ப்புகளைக் கண்டறிந்துகொள்ள அவர்களால் முடிவதுடன், வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சியாளர்களாக அவர்கள் தமது தொழில் பயணங்களை ஆரம்பித்துக்கொள்ளவும் முடியும்" - என்று குறிப்பிட்டார்.

## MMCA இலங்கை 'முழு நில அமைப்பு' கண்காட்சியின் இரண்டாவது சுழற்சி



நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (MMCA இலங்கை) ஆனது 'முழு நில அமைப்பு' எனும் கண்காட்சியின் இரண்டாவது சுழற்சியை டிசம்பர் 15 ஆம் திகதி அன்று திறந்து வைத்தது. சந்தேவ் ஹன்டி மற்றும் தினால் சஜீவவால் எடுத்தாளப்பட்ட இந்தக் கண்காட்சியானது, இலங்கையில் நிலப்பரப்புகள் மாற்றமடைந்துள்ள பரந்த, சடுதியான, கிளர்த்தும் பாங்கான வழிகளை ஆராய்கிறது.

'முழு நில அமைப்பு' கண்காட்சியின் இரண்டாவது சுழற்சி இலங்கையைச் சேர்ந்த ஒன்பது சமகாலக் கலைஞர்களின் படைப்புகளைக் காட்சிப்படுத்துகிறது. அவர்களில் அப்துல் ஹாலிக் அஸீஸ் (பி.1985), சந்திரகுப்த தேனுவர (பி.1960), தனுஷ்க மாரசிங்க (பி.1985), டொமினிக் சன்சோனி (இ.1956), ஜாஸ்மின் நிலானி ஜோசப் (பி.1990), கோரலேகெதர புஷ்பகுமார (பி.1968), பால பொ(த்)துபிட்டிய (பி.1972), பிரதீப் தலவத்த (பி.1979), மற்றும் தா. சனாதனன் (பி.1969) ஆகியோர் அடங்குவர்.

MMCA இலங்கையின் சிரேஷ்ட எடுத்தாளுநர் ஹேண்டி இதுபற்றிக் கூறுகையில், "கலைஞர்கள் நீண்ட காலமாக அதிகாரத்தை—அது எவ்வாறு செயற்படுகிறது மற்றும் அதை நிலைநாட்டப் பயன்படுத்தப்படும் கருவிகளை ஆராய்ந்து வந்துள்ளனர். சமகாலக் கலைஞர்களும் இதற்கு விதிவிலக்கல்ல" - என்றார். அத்துடன், "எல்லைகள், அணுகல் மற்றும் நிலத்தின் மீதான அதிகாரம் பற்றிய கேள்விகள் அவசர முறையில் எதிர்கொள்ளப்படும் இந்தக் காலகட்டத்தில், 'முழு நில அமைப்பு' என்ற கண்காட்சியின் இரண்டாவது சுழற்சி, நிலத்துடனான நமது உறவு எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை நுணுக்கமாக ஆராய்கிறது" - எனத் தெரிவித்தார்.

## பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை கொண்டாடும் ஜோன் கீல்ஸ் குழுமம்



ஜோன் கீல்ஸ் குழுமம் நவம்பர் 25 ஆம் திகதி பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை ஜோன் கீல்ஸ் அறக்கட்டளையின் (JKF) நிறுவன சமூகப் பொறுப்புணர்வால் (CSR) மேற்கொள்ளப்பட்ட நீடித்த முன்முயற்சிகள் மற்றும் குறியிலக்கு கொண்ட பிரசாரங்கள் மூலம் நினைவுகூர்ந்ததனூடாக பாலின அடிப்படையிலான வன்முறையை (GBV) எதிர்த்துப் போராடுவதற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

இந்த ஆண்டின் நிகழ்வுகளில் ஜேகேஎஃவ் இன் புரொஜெக்ட் வேவ் (கல்வியின் மூலம் வன்முறைக்கு எதிராக செயற்படுதல்) மூலம் எட்டாவது ஆண்டு பொதுப் பிரசாரம், குழுவிலுள்ள மனிதவள நிபுணர்களுக்கான கொள்கை விழிப்புணர்வு அமர்வுகள், மின்னணு மற்றும் சமூக ஊடக தளங்கள் மூலம் பொதுமக்களை அணுகுதல் போன்ற செயற்பாடுகளுடன் எழுந்து நில், வெளிப்படையாகப் பேசு, வன்முறை சுழற்சியை முடிவுக்குக் கொண்டுவருதல் என்ற கருப்பொருளின் கீழ் உள்ளடக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களுக்கான விழிப்புணர்வு அமர்வுகளும் திட்டமிடப்பட்டிருந்தன. ஆனால், தேர்தல்கள் காரணமாக அவை ஒத்திவைக்கப்பட்டன. இந்த முயற்சிகள் பணியிடங்கள் மற்றும் சமூகங்களுக்குள் பாதுகாப்பான, மேலும் உள்ளடக்கிய சூழலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவரான கிருஷான் பாலேந்திரா ஓர் உள்ளக பணித்துறை அறிவிப்பில், "மக்கள்தொகையில், ஏறக்குறைய 52% பெண்களாக இருந்த போதும் தொழிலாளர் சக்தியில் மூன்றில் ஒரு பங்கை மட்டுமே பெண்கள் இன்னும் கொண்டுள்ளனர் என்பது மிகவும் கவலைக்குரியதாக உள்ளது.

ஆழமாக வேரூன்றிய மனப்பான்மைகள் பெண்களின் திறனைக் கட்டுப்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. அதேசமயம், பாலின அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் கவலைகள் பலரை வேலை அல்லது தொழில்முனைவில் நுழைவதிலிருந்து அல்லது தொடர்வதிலிருந்து தடுக்கின்றன.

ஜோன் கீல்ஸ் குழுவின் நன்னடத்தைக் கோட்பாட்டு விதிகளில் பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பது மற்றும் அதைக் குறித்துப் பேசுவது, குழுமத்தின் பாகுபாடில்லாக் கொள்கை, பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான கொள்கை ஆகியவற்றால் வலுப்படுத்தப்பட்டுள்ளது. பணியிடத்தில் எந்தவொரு பாலியல் துன்புறுத்தலுக்கும் பூச்சிய சகிப்புத்தன்மைக் கொள்கையுடன் குழுமம் செயற்படுகிறது மற்றும் அதன் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான சூழலை வழங்க உறுதிபூண்டுள்ளது'' - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியை வலுவூட்டும் CBL சமபோஷ




பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிக்கு தொடர்ச்சியாக 13ஆவது வருடமாகவும் பிரதான அனுசரணை வழங்க CBL சமபோஷ பெருமையுடன் முன்வந்துள்ளது.

இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தினால் (SSFA) ஏற்பாடு செய்யப்படும் 'CBL சமபோஷ 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி' ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நடத்தப்பட உள்ளது. இந்தப் போட்டித் தொடருக்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் தனது வழிப்படுத்தல்களையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது.

இந்தப் போட்டித் தொடரில் 12,000 க்கும் அதிகமான பாடசாலை உதைபந்தாட்டப் போட்டியாளர்கள் கலந்துகொள்ளவிருப்பதுடன், பல வருடங்களாக இந்த உதைபந்தாட்டப் போட்டித் தொடருக்கு நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் உற்சாகமான வரவேற்புக் காணப்படுகின்றமை விசேடமானது. நாடு முழுவதிலுமுள்ள 25 மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் 32 மைதானங்களில் 492 மாணவர் அணிகளும் 118 மாணவிகள் அணிகளும் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன. இந்தப் போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் வெற்றிபெறும் 32 மாணவர்கள் அணிகளும் 28 மாணவிகள் அணிகளும் வவுனியாவை மையமாகக் கொண்டு நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெறவுள்ளன.

இந்தப் போட்டித் தொடரின் முதலாவது சுற்று ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், இரண்டாவது சுற்று பெப்ரவரி 1, 2 மற்றும் 3ஆம் திகதிகளில் வவுனியாவில் ஆரம்பமாக உள்ளது. மாணவர்கள் மற்றும் மாணவிகள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனைக்கான அங்கீகாரம் மற்றும் போட்டி முடிவின் போது பரிசுகள் வழங்கப்படும்.

சமபோஷ என்பது CBL குழுமத்தின் முழுமையான உறுப்பு நிறுவனமான CBL Plenty Foods (Pvt.) Ltd. நிறுவனத்தின் முன்னணி வர்த்தக நாமம் ஆகும். இது நாட்டின் தானியம் நிறைந்த போஷாக்கு மிக்க காலை உணவின் முன்னணி வர்த்தக நாமமாகும். இந்நாட்டின் விவசாயிகளால் வழங்கப்படும் பலம் மிக்க பெறுமதியான தானியங்களே நாடு முழுவதிலும் உள்ள சிறார்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் உயர்ந்த போஷாக்கை வழங்க தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் உள்ளது.

# ஒன்பது வருடங்களின் பின் நியூஸிலாந்து மண்ணில் வெற்றியீட்டிய இலங்கை

## ஒருநாள் தொடர் நியூஸிலாந்து வசம்



(அகீல் சிஹாப்)

நியூஸிலாந்து அணியுடனான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டியில் 140 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டிய இலங்கை அணி 09 வருடங்களின் பின்னர் நியூஸிலாந்து மண்ணில் ஒருநாள் வெற்றியை பதிவு செய்தது.

இலங்கை கிரிக்கெட் அணியானது வெள்ளைபந்து கிரிக்கெட் தொடரில் (ஒருநாள் மற்றும் ரி20) விளையாடுவதற்காக நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தது. இதில் முதல் தொடரான ரி20 தொடரினை நியூஸிலாந்து அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில் அடுத்து 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் கடந்த 05ஆம் திகதி ஆரம்பமாகியது.

முதல் இரு போட்டிகளிலும் வெற்றியீட்டி நியூஸிலாந்து அணி தொடரை முன்னதாகவே வசப்படுத்திய நிலையில் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் நேற்று முன்தினம் ஒக்லாந்தில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 08 விக்கெட்டுகளை இழந்து 290 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் பெத்தும் நிஸ்ஸங்க - 66, குசல் மெண்டிஸ் - 54, ஜனித் லியனகே - 53, கமிந்து மெண்டிஸ் - 46 ஓட்டங்களை குவித்தனர்.

291 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 29.4 ஓவர்கள் நிறைவில், சகல விக்கெட்டுகளையும் இழந்து 150 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. பந்துவீச்சில் அசித்த பெனாண்டோ, மஹீஷ் தீக்ஷண, எஷான் மாலிங்க ஆகியோர் தலா 03 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

முதல் ஒரு போட்டிகளிலும் வெற்றியீட்டிய நியூஸிலாந்து அணி தொடரை 2-1 என கைப்பற்றியது. எனினும் இலங்கை அணி, நியூஸிலாந்து மண்ணில் இறுதியாக கடந்த 2015 டிசம்பரில் ஒருநாள் போட்டியொன்றில் வெற்றியீட்டியதன் பின்னர் தற்போது 09 வருடங்களில் போட்டியொன்றில் வென்றுள்ளது.

இலங்கை அணி அடுத்ததாக சொந்த மண்ணில் அவுஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்த தொடர் எதிர்வரும் 29ஆம் திகதி காலியில் ஆரம்பமாகிறது.

# இளையோர் மகளிர் ரி20 உலகக்கிண்ணத்துக்கான இலங்கை குழாம் அறிவிப்பு



இரண்டாவது தடவையாக நடைபெறவுள்ள ஐ.சி.சி. இளையோர் (19 வயதுக்குட்பட்டோருக்கான) மகளிர் ரி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் மனுதி நாணயக்கார தலைமையிலான இலங்கை குழாம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

மலேசியாவில் நடைபெறவுள்ள குறித்த தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் பெப்ரவரி 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஐ.சி.சி. நடத்தும் மகளிருக்கான போட்டித் தொடரொன்றை மலேசியா நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

இதில் முக்கிய சிறப்பம்சம் என்னவெனில், தென் பசுபிக் பெருங்கடலில் இருக்கும் தீவுகளில் ஒன்றான சமோவா தீவுகள் முதல் முறையாக கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரொன்றில் விளையாட உள்ளது.

எனவே, மொத்தம் 16 அணிகள் பங்கேற்கும் இத்தொடரானது நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு குழுவிலும் தலா 04 அணிகள் இடம்பிடித்துள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் 03 இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 06 சுற்றுக்கு முன்னேறும்.

இலங்கை அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் மலேசியாவை ஜனவரி 19ஆம் திகதி சந்திக்கிறது. தொடர்ந்து 21ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளுடனும் 23ஆம் திகதி இந்தியாவுடனும் மோதுகிறது.

***இலங்கை குழாம்***

மனுதி நாணயக்கார (தலைவி), ரஷ்மிக்கா செவ்வந்தி (உப தலைவி), விமோக்ஷா பாலசூரிய, ஹிருணி ஹன்சிகா, சுமுது நிசன்சலா, ரஷ்மி நேத்ராஞ்சலி, சஷினி கிம்ஹானி, சஞ்சனா காவிந்தி, ஷெஹாரா இந்துவரி, தஹாமி சனுத்மா, அஷேனி தலகுனே, ப்ரமுதி மெத்சரா, சமோதி ப்ரபோதா, தனுலி தென்னக்கூன், லிமன்சா திலகரட்ன.

# 14 மாதங்களின் பின் மீண்டும் அணிக்குத் திரும்பிய ஷமி

**இங்கிலாந்து அணிக்கு எதிரான ரி20 தொடருக்கான இந்திய சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 05 ரி20 மற்றும் 03 ஒருநாள் போட்டிகள் தொடர்களில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையில் முதலில் ரி20 தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது.**

**இந்த நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான ரி20 தொடருக்கான இந்திய அணியை பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. இந்திய அணியை சூர்யகுமார் யாதவ் வழிநடத்துகிறார். உப தலைவராக அக்ஷர் படேல் நியமிக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக கடந்த 14 மாதங்களாக இந்திய அணியில் இடம்பெறாமலிருந்த வேகப் பந்துவீச்சாளர் முகமட் ஷமி அணிக்குத் திரும்பியுள்ளார்.**

**பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் இடம்பெற்ற நிதீஷ் குமார் ரெட்டி மற்றும் ஹர்சித் ராணா இருவரும் இங்கிலாந்துக்கு எதிரான இந்த ரி20 தொடருக்கான இந்திய அணியில் இடம்பெற்றுள்ளனர்.**

***இந்திய அணி விபரம்***

**சூர்யகுமார் யாதவ், சஞ்சு சாம்சன், அபிஷேக் சர்மா, திலக் வர்மா, ஹார்திக் பாண்டியா, ரிங்கு சிங், நிதீஷ் குமார் ரெட்டி, அக்ஷர் படேல், ஹர்சித் ராணா, அர்ஷ்தீப் சிங், முகமட் ஷமி, வருண் சக்கரவர்த்தி, ரவி பிஷ்னோய், வாஷிங்டன் சுந்தர், துருவ் ஜுரெல்.**



# அடிலெய்ட் சர்வதேச டென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டம் அகர், கீஸ்

**அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற அடிலெய்ட் சர்வதேச டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் கனடாவின் பெலிக்ஸ் அகர், மகளிர் பிரிவில் அமெரிக்காவின் மேடிசன் கீஸ் ஆகியோர் சம்பியன் பட்டம் வென்றனர்.**

**கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகிய குறித்த தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டிக்கு பெலிக்ஸ் அகர் (கனடா) மற்றும் செபாஸ்டியன் கோர்டா (அமெரிக்கா) ஆகியோர் முன்னேறினர். இதில் பெலிக்ஸ் அகர் 6:3, 3:6, 6:1 என்ற செட் கணக்கில் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்றார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, சக நாட்டவரான மேடிசன் கீஸ் உடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6:3, 4:6 மற்றும் 6:1 என்ற செட் கணக்கில் கீஸ் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.**




# விளையாட்டுத் துளிகள்

தென்னாபிரிக்க அணியுடனான இரண்டாவது டெஸ்டின்போது களத்தடுப்பில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர் சையிம் ஐயுப் எதிர்பாராத விதமாக தவறி விழுந்தார். இதில் அவரது காலில் உபாதை, தசைபிடிப்பு ஏற்பட்டது. இதையடுத்து, அவர் மைதானத்தில் இருந்து உடனடியாக வெளியேறினார். இந்நிலையில் சிகிச்சைக்காக இங்கிலாந்து சென்றுள்ளார். உபாதையிலிருந்து குணமாக 06 மாதங்களுக்கு மேல் ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின்போது குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காத காரணத்தில் பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐ.சி.சியானது போட்டி கட்டணத்தில் 25 சதவீதம் அபராதமாக விதித்துள்ளது. மேலும், 05 ஓவர்களை குறிப்பிட்ட நேரத்துக்குள் வீசி முடிக்காத பாகிஸ்தான் அணிக்கு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகளில் இருந்து 05 புள்ளிகளும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பாகிஸ்தான் அணியின் புள்ளிகள் 40 (27.78 சதவீதம்) புள்ளிகளில் இருந்து 35 (24.31 சதவீதம்) புள்ளிகளாக குறைந்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★

அயர்லாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 41 ரன்களை அடித்த இந்திய வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா, ஒருநாள் கிரிக்கெட்டில் அதிவேகமாக 4000 ரன்களை கடந்த இந்திய வீராங்கனையான மிதாலி ராஜின் சாதனையை முறியடித்தார். மிதாலி ராஜ் 112 இன்னிங்ஸ்களில் 4000 ரன்களை கடந்திருந்த நிலையில், ஸ்மிரிதி மந்தனா 96 இன்னிங்ஸ்களில் கடந்து சாதனை படைத்தார். உலகளவில் அதிவேகமாக 4000 ஒருநாள் ரன்கள் அடித்தவர்கள் பட்டியல் அவுஸ்திரேலியாவின் பெலிண்டா கிளார்க் (86 இன்னிங்ஸ்கள்) உள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★

சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான அணிகளை நேற்று ஞாயிற்றுக்கிழமைக்குள் அறிவிக்க வேண்டும் என 08 நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கும் ஐ.சி.சி. அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இந்நிலையில், இந்திய கிரிக்கெட் சபையானது வீரர்களின் பட்டியலை வெளியிட காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் என ஐ.சி.சியிடம் கோரிக்கை வைத்துள்ளது. இதனால் இந்திய அணி குறித்த அறிவிப்புகள் இன்னும் சில தினங்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான வருண் ஆரோன் (வயது 35) நடப்பு விஜய் ஹசாரே தொடரில் ஜார்கண்ட் அணியின் வெளியேற்றத்தை தொடர்ந்து அனைத்து வகை போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார். இந்திய அணியில் கடந்த 2011ஆம் ஆண்டு அறிமுகமான அவர் 18 சர்வதேச போட்டிகளில் விளையாடினார். இவர் இந்திய அணியில் கடைசியாக 2015ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்தார்.

# திருக்கோ ரி20 லீக் - 2025




**(கிண்ணியா நிருபர்)**

**திருக்கோ ரி20 லீக் 2025இல் மூன்றாவது பருவம் நடைபெறவுள்ளது. இந்த பருவத்தில் 12 அணிகள் பங்கேற்கின்றன. இந்த போட்டிகள் ஜனவரி 18, 19, 24, 25 மற்றும் பெப்ரவரி 01, 02 ஆகிய திகதிகளில் நடைபெறும்.**

**திருக்கோ சுப்பர் 40 கிரிக்கெட் கிளப் இந்த போட்டியை ஒழுங்கமைக்கின்றது. இந்த லீக், கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு சிறந்த அனுபவத்தை வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. 12 அணிகள், தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி, வெற்றிக்காக போட்டியிடும்.**

**இந்த ரி20 லீக், கிரிக்கெட் ரசிகர்களுக்கு மட்டுமல்லாமல், இளம் வீரர்களுக்கும் ஒரு அரிய வாய்ப்பாக இருக்கும். அவர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி, எதிர்காலத்தில் பெரிய அணிகளில் விளையாட வாய்ப்பு பெறலாம்.**

# ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாமான ஆஸி. ஓபன் ஆரம்பம்






நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் நேற்று அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் ஆரம்பமானது. 15 நாட்கள் நடைபெறும் இந்த தொடரின் இறுதிப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும்.

இதில் நடப்பு சம்பியன்களான, ஆடவர் பிரிவில் உலகின் நம்பர் 1 வீரர் ஜேக் சின்னர், மகளிர் பிரிவில் அரியனா சபலென்கா ஆகியோர் தங்கள் பட்டத்தை தக்க வைக்கும் முனைப்பில் களமிறங்கியுள்ளனர். இத்தாலியின் ஜேக் சின்னர் மீது இரு தடவைகள் ஊக்கமருந்து பயன்படுத்தியதாக சர்ச்சை எழுந்த நிலையில், அவர் மீண்டும் பட்டம் வெல்ல தயாராகி வருகிறார்.

கடந்த 2024இல் ஆஸி. ஓபன் பட்டத்தையும் யு.எஸ். ஓபன் பட்டத்தையும் வென்றிருந்தார் ஜேக் சின்னர். உலகின் நம்பர் 1 வீரராகவும் திகழ்கிறார். மூன்று முறை ஆஸி. ஓபன் இறுதிக்கு தகுதி பெற்ற ரஷ்ய வீரர் டெனில் மெத்வதேவ், ஸ்பெயின் நட்சத்திரம் நான்கு முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியன் கார்லோஸ் அல்கராஸ், 10 முறை ஆஸி. ஓபன் சம்பியன் ஜோகோவிச், உலகின் 2ஆம் நிலை வீரர் அலெக்ஸ் வெரேவ் ஆகியோரும் களம் காண்கின்றனர்.

மகளிர் பிரிவில் பெலாரஸ் வீராங்கனை அரியனா சபலென்கா ஹெட்ரிக் சம்பியன் பட்டத்தை வெல்லும் தீவிரத்தில் உள்ளார். மார்ட்டினா ஹிங்கிஸ் (1997-99) போன்று ஹெட்ரிக் பட்டத்தை வெல்ல வாய்ப்பு உள்ளது. அவ்வாறு சாதனை படைத்தால் மார்க்ரெட் கோர்ட், கூலாகேங், ஸ்டெஃப்பி கிராஃப், மோனிஸா செலஸ் வரிசையில் இடம் பெறுவார்.

உலகின் 3ஆம் நிலை வீராங்கனை கோகோ கௌஃப், 2020 ஆஸி ஓபன் சம்பியன் சோபியா கெனின், இரண்டாம் நிலை வீராங்கனை ஸ்வியாடெக், எலனா ரைபக்கினா, 8ஆம் நிலை வீராங்கனை எம்மா நவ்ரோ ஆகியோரும் தங்கள் திறமையை நிரூபிக்க காத்துள்ளனர்.



சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2025 நிகழ்வில் நேற்றைய (12) தினம் கண்டியைச் சேர்ந்த கிருஷ்ணகாந்தன் சந்தீப் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் சிறந்த பண்பாட்டுத் தூதுவருக்கான விருதைப் பெற்றுக்கொண்டார். குறித்த மாநாட்டில் தமிழ் நாட்டின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு அமைச்சு மூலம் நடத்தப்பட்ட 'வேர்களைத் தேடி' என்ற திட்டத்தின் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கலை, பண்பாட்டு ஒப்பந்தங்களுக்கு காரணமானவர் என்பதற்காக இவ்விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பேராதனை நிருபர்)



தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலையால் பசறையிலிருந்து மடுகஸ்தலாவை செல்லும் வீதியில் பரமாங்கடைச் சந்திக்கருகாமையில் பாரிய மண்மேடு சரிந்து வீதியில் விழுந்துள்ளமையால் வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

(ராமு தனராஜா)

## பசறையில் பஸ் விபத்து: ஐவர் காயம்!



ராமு தனராஜா

பஸ் விபத்தில் 06 வயதுச் சிறுவன் உட்பட ஐவர் படுகாயமடைந்து பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து பசறை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸொன்று பசறை 10ஆம் கட்டைப் பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்த நிலையில் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

படல்கும்பரை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய தாயும் 06 வயது மகனும் உட்பட எல்டப் மற்றும் கோணக்கலை பசறை டெமேரியா பகுதியைச் சேர்ந்த 27, 38, 48 வயதுடையவர்களுமே இவ்வாறு காயமடைந்து பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பஸ் விபத்து இடம்பெறும்போது பஸ்ஸில் சுமார் 15க்கும் மேற்பட்டோர் இருந்ததாகவும் ஏனையோருக்கு காயமேற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. பஸ்ஸை பஸ்ஸின் நடத்துனரே செலுத்தியதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## டிக்கோயா ஆரம்ப பாடசாலை மாணவர்கள் திடீர் சுகயீனம்





எஸ்.கணேசன்

அட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட டிக்கோயா ஸ்ரீவாணி ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் சுமார் 50 மாணவர்களுக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் தொடர்பாக அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் (11) குறித்த பாடசாலைக்குச் சென்று பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேற்படி பாடசாலையில் 1, 2, 3, 4ஆம் மற்றும் 5ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் 50 பேரே இவ்வாறு, திடீரென சுகயீனமடைந்துள்ளனர்.

குறித்த மாணவ, மாணவிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை (10) மாலை முதல் தலைச்சுற்றல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டதையடுத்து பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

50 மாணவர்களில் 25 மாணவர்கள் டிக்கோயா ஆதார வைத்தியசாலையிலும் ஏனைய 25 மாணவர்கள் ஹட்டன் நகரத்திலுள்ள தனியார் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 25 மாணவர்களில் 22 மாணவர்கள் சிகிச்சைக்குப் பிறகு வீடு திரும்பியுள்ளனர். மீதமுள்ள மூன்று மாணவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாணவர்களின் நிலைமை பாரதூரமாக இல்லையெனவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை (10) பாடசாலையில் மாணவர்களுக்கு காலை உணவாக சோறு, போஞ்சி, பருப்பு மற்றும் கீரை ஆகியவற்றை வழங்கியதாகவும் எனினும், அந்த உணவை சாப்பிடாத மாணவர்களும் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதனால், பாடசாலையிலுள்ள குடிநீரினால் எதுவும் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாமென சந்தேகித்த அம்பேகமுவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் (11) பாடசாலைக்கு விஜயம் செய்து குடிநீர் மாதிரிகளைச் சேகரித்துள்ளதோடு, தொடர்ந்தும் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மலையகத் தியாகிகளை நினைவுகூரும் வகையில் தியாகிகள் தினம் அனுஷ்டிப்பு


எஸ்.கணேசன்

மலையக மக்களுக்கான உரிமைப் போராட்டங்களில் உயிர்த்தியாகம் செய்த மலையகத் தியாகிகளை நினைவுகூரும், மலையகத் தியாகிகள் தினம் கடந்த வெள்ளிக்கிழமை (10) கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

'பிடிதளராதே' அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொது மக்களெனப் பலரும் கலந்துகொண்டனர். பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மலையகத் தமிழ்மக்களுக்குரிய தொழில்சார் உரிமைகள், காணி உரிமை, மொழியுரிமை, அரசியல் உரிமை, பொருளாதார உரிமை உள்ளிட்ட விடயங்களுக்கான போராட்டங்களிலானபோது உயிர் நீத்தவர்களே நினைவுகூரப்படுகின்றனர். பிடிதளராதே அமைப்பு மற்றும் மலையக உரிமைக்குரல் என்பன இணைந்து 2019 டிசம்பர் மாதம் சர்வதேச தேயிலை





தினத்தன்று மலையகத் தியாகிகள் தினத்தை நடத்தியிருந்தன.

நுவரெலியா மாவட்டம், தலவாக் கலை, டெவோன் தோட்டத்திலுள்ள மலையக மக்களுக்கான காணி உரிமைப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த சிவனு லெட்சுமணனின் கல்லறையில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்து, மலையகத் தியாகிகள் வரலாற்றை ஆரம்பித்து வைத்த முல்லோயா கோவிந்தன் உயிர் துறந்த ஜனவரி 10ஆம் திகதியை, மலையகத் தியாகிகள் தினமாக அனுஷ்டிப்பதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படியே ஜனவரி 10ஆம் திகதி மலையகத் தியாகிகள் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2020 ஜனவரியில் மஸ்கெலியாவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. 2021 இல் பத்தனையில் நடைபெற்றது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கொட்டகலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே இம்முறை கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

## விக்டோரியா நீர்த்தேக்கத்தில் கசிப்பு உற்பத்தி

### மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் முற்றுகை

ஜே.எம்.ஹாபீஸ்

தெல்தெனிய விக்டோரியா நீர்த்தேக்கத்திலுள்ள மறைவான தீவுப் பகுதிகளில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யும் இடத்தை மதுவரித்திணைக்கள அதிகாரிகள் கடந்த சனிக்கிழமை (11) முற்றுகையிட்டனர்.

மேற்படி சுற்றிவளைப்பின்போது தொடர்புடைய சந்தேக நபர்கள் ஓடித்தப்பியபோதும் அதிகாரிகளால் கசிப்பு தயாரிக்க பயன்படும் கோடா திரவம் 04இலட்சம் மில்லி லீற்றர் வரை கைப்பற்றப்பட்டுள்ளது. 50 பெரல்கள், சீனி, இரும்புச் சுருள்கள் உட்பட கசிப்பு வடித்தலுக்குத் தேவையான பல்வேறு உபகரணங்களையும் கைப்பற்றினர்.

மதுவரித்திணைக்கள அதிகாரி யூ.பி. மாறசிங்க தலைமையிலான குழுவினரே மேற்படி முற்றுகையை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் படகு மூலம் மேற்படி



தீவை அடைந்து அதன் பின்பே பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மேற்படி முற்றுகையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இங்கு தயாரிக்கப்படும் சட்டவிரோத கசிப்பானது தெல்தெனிய, திகன, பலகொல்ல, மெனிக்கின்ன, பல்லேகெலே, ரஜவெல, ஹாரகம, வலப்பனை உட்பட இன்னும் பல இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சிறிதரன் எம்.பியின் அரசியலுக்குள் சிக்கியுள்ள துயிலுமில்லங்களை மக்கள்மயப்படுத்த வேண்டும்

### மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் அமைப்பின் தலைவர் பார்த்தீபன்





பு.கஜிந்தன்

''சிறிதரனின் அரசியலுக்குள் துயிலுமில்லங்களை அனுமதிக்க முடியாது. சிறிதரன் தனது வாக்குக்காக துயிலுமில்லங்களைப் பயன்படுத்துகிறார். அரசியலுக்குள் சிக்கியுள்ள துயிலுமில்லங்களை மக்கள்மயப்படுத்த வேண்டும். அதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம்''- என மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் அமைப்பின் தலைவர் பார்த்தீபன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பதற்காக மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பக தரப்புகள் முனைந்தபோது கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை நிர்வகிப்பது யார் என்ற சர்ச்சை எழுந்த நிலையில், அமைதியின்மை ஏற்பட்டதுடன், பொலிஸார் தலையீடு செய்து அமைதியை ஏற்படுத்தினர்.

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் 2016ஆம் ஆண்டு நினைவேந்தலுக்காக அனுமதிக்கப்பட்டது. இதன்போது பிரதான சுடரை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் ஏற்றிவைக்க, மாவீரர் குடும்பங்களினாலும் சுடர் ஏற்றி அஞ்சலிக்கப்பட்டது. இவ்வாறு, தொடர்ந்து 09 ஆண்டுகளாக அஞ்சலிக்கப்பட்டு வருகின்றது. பல்லாயிரம் மக்கள் திரண்டு அஞ்சலிக்கும் குறித்த மாவீரர் துயிலுமில்லம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கடந்த வருடம் பிரதான சுடர் ஏற்றுவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக குறித்த துயிலுமில்ல நிர்வகிப்பு தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது. மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பு, மாவீரர் துயிலும் இல்லங்கள் பொதுமயப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தது.

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் நிர்வாகத் தெரிவை நேற்று முன்தினம் (11) நடத்த அழைப்பு விடுத்திருந்தனர். இதனையடுத்து குறித்த பகுதிக்குச் சென்றவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், தற்போதுள்ள நிர்வகிக்கும் தரப்பே தொடர்ந்தும் செயற்பட வேண்டுமென வலியுறுத்தினர்.

இதனால் குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது. மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அவ்வமைப்பின் அழைப்பில் சென்ற மக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் அமைதியின்மை தொடர்ந்த நிலையில், கிளிநொச்சி பொலிஸார் அங்கு சென்றனர். அப்பகுதியில் கூட்டமாக நிற்க வேண்டாமெனவும் பிரச்சினைகள் இருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறும் தெரிவித்து மக்களை வெளியேற்றினர். இதேவேளை, குறித்த துயிலுமில்ல வளாகத்துக்குள் அத்துமீறிச் செல்லவேண்டாமென்ற அறிவித்தலை கரைச்சி பிரதேச சபையினர் ஒட்டியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. குறித்த விடயம் தொடர்பில் முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சுப்பையா குறிப்பிடுகையில், மக்களின் நினைவேந்தலை தடுக்கும் வகையிலும் நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அடிப்படையிலும் மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பு செயற்படுவதாகத் தெரிவித்தார்.

அதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதுவரை நடந்த நடைமுறைகளே பின்பற்றப்பட்டு நினைவேந்தல்கள் நடைபெறும். மக்கள் தெளிவாக செயற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பின் தலைவர் பார்த்தீபன் தெரிவிக்கையில், மக்கள்மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை அமைக்கவேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இன்று சிறிதரனுடன் தொடர்புடைய சிலர் அங்கு குழப்பங்களை ஏற்படுத்தினர். நாகரிகமற்ற வார்த்தைகளைப் பேசினர். தொடர்ந்தும் சிறிதரனின் அரசியலுக்குள் துயிலுமில்லங்களை அனுமதிக்க முடியாது. சிறிதரன் தனது வாக்குக்காக கனகபுரம், முழங்காவில், தேராவில், சாட்டி ஆகிய துயிலுமில்லங்களைப் பயன்படுத்துகிறார். அரசியலுக்குள் சிக்கியுள்ள துயிலுமில்லங்களை மக்கள்மயப்படுத்த வேண்டும். அதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.





கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கம், வல்வெட்டி நலன்புரிச் சங்கம் கனடா மற்றும் நிழல்கள் அமைப்பு கனடா ஆகியவற்றின் நிதி அனுசரணையில் தெரிவுசெய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு பொங்கல் பானைகள் வழங்கிவைத்துள்ளன. நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் க.விஜயசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் பிரபாத் வீரவத்த மற்றும் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர், நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (மு.தமிழ்ச்செல்வன்)

## யாழ். பல்கலையில் மலையக தியாகிகளின் நினைவேந்தல்!








பு.கஜிந்தன்

மலையகத் தியாகிகள் தினம் மற்றும் 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல் ஆகியன யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

இந்த நினைவேந்தலானது, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் பல்கலைக்கழக பொதுத் தூபியில் கடந்த வெள்ளிக்கிழமை (10) உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

தேயிலைச் செடிகளின் நடுவே உழைப்புச் சுரண்டல்களுக்கும் அடிப்படை உரிமை மீறல்களுக்கும் உள்ளாகி அடிமைப்படுத்தப்பட்ட மலையகத் தமிழ் மக்களின் சமூக அரசியல் விடுதலைக்கான பயணத்தில் தம்முயிர் ஈர்த்தவர்களை நினைவேந்தும் முகமாக இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்துடன், 1974ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஸ்ரீலங்கா பொலிஸாரால் அரங்கேற்றப்பட்ட படுகொலைகளால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட கொடூரம் நிகழ்ந்து 2025ஆம் ஆண்டுடன் 51ஆண்டுகள் நிறைவடைகின்றன. இன்றுவரையில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நீதி என்பது மறுக்கப்பட்டதொன்றாகவே நீள்கின்றது.

## யாழில் மனைவியின் காதை வெட்டியவருக்கு விளக்கமறியல்!

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பகுதியில் மனைவியின் காதை வெட்டியவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது கணவனின் சித்திரவதை தாங்க முடியாது சண்டிலிப்பாயில் உள்ள உறவினரின் வீட்டில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில், அங்கு சென்ற கணவன் கடந்த 07ஆம் திகதியன்று மனைவியின் காதை வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பின்னர் இச்சம்பவம் குறித்து கடந்த 10ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த சந்தேகநபருக்கு எதிராக வேறு சில முறைப்பாடுகளும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பதியப்பட்டுள்ளன. இந்நிலையில், குறித்த சந்தேகநபர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் இதற்கு முன்னரும் மனைவியின் தலை மற்றும் காலை உடைத்து பல்வேறு சித்திரவதைகளைப் புரிந்தவரென விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று முன்தினம் (11) மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.



‘எஞ்சியது சாம்பல்தான்...’

# ரூ.39 இலட்சம் கோடி இழப்பை ஏற்படுத்திய காட்டுத் தீ

## லொஸ் ஏஞ்சல்ஸ் நிலைவரம் மோசம்

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தொடர்ந்து பரவி வரும் காட்டுத் தீக்கு இதுவரை 11 பேர் உயிரிழந்தனர். 38,000 ஏக்கர் பரப்பளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. இதுவரை பொருட்சேதத்தால், இலங்கை மதிப்பில் ரூ.39 இலட்சம் கோடிக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள புகழ்பெற்ற நகரம் லொஸ் ஏஞ்சல்ஸ். இங்குதான் ஹொலிவூட் பகுதி உள்ளது. முன்னணி திரைப்பட நிறுவனங்கள், திரைப்பட நகரங்கள் உள்ளதால் ஹொலிவூட் திரையுலகின் தலைநகராக லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளது. கடந்த 7ஆம் திகதி இங்கு ஏற்பட்ட காட்டுத் தீ தொடர்ந்து 05 நாட்களாக வேகமாக பரவி வருகிறது. கடந்த 08 மாதங்களாக போதிய மழை பொழிவு இல்லாததால் வறண்டு காணப்பட்ட இப்பகுதியில் ஏற்பட்ட தீ, பலத்த காற்று வீசியதன் காரணமாக காட்டுத் தீயாக மாறி வேகமாக பரவியது. இதனால், இலட்சக்கணக்கில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். வெளியேற வேண்டிய கட்டாயத்தில் மேலும் பல இலட்சம் மக்கள் உள்ளனர்.

**வெளியேற்றம்:** காட்டுத் தீ பரவுவதைப் பொறுத்து பகுதி பகுதியாக வெளியேற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 91 வெளியேற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், வெளியேற தயாராக இருக்குமாறு 64 எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. லொஸ் ஏஞ்சல்ஸ் முழுவதும் 1,44,000க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்ற உத்தரவுகளின் கீழ் இருப்பதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது நகரம் முழுவதிலும் 06 பகுதிகள் தீ விபத்துகளால் எரிந்து வருகின்றன.

***மாணவர்களுக்கு கலிபோர்னியா பல்கலை எச்சரிக்கை***

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம், தங்கள் மாணவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதில், மாணவர்கள் வெளியேறுவதற்கு தயாராக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தை ஒட்டிய ஒரு பகுதிக்கு அரசு வெளியேற்ற எச்சரிக்கை விடுத்துள்ளதை அடுத்து, இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகம் விளக்கம் அளித்துள்ளது.

கலிபோர்னியாவின் மாலிபு கடல்முனை பகுதியில் 13,000 ஏக்கர் பரப்பளவுக்கு தீ பரவியுள்ளதாகவும் ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுவிட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த 1993ஆம் ஆண்டு மாலிபுவில் தீ விபத்து ஏற்பட்டது. அப்போதைய தீ விபத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர், “அந்தக் காட்டுத் தீயும் காற்றினால் தூண்டப்பட்டது. அதே வானிலை நிகழ்வு, தற்போதைய தீயை கட்டுப்படுத்துவதை கடினமாக்குகிறது. நாங்கள் இங்கிருந்து எங்கு செல்வோம் என்று எனக்குத் தெரியவில்லை. எங்கள் அண்டை வீட்டார் வெளியேற்றப்பட்டுவிட்டனர். தலைமுறை தலைமுறையாக இருந்து வந்த மக்களின் வாழ்வாதாரங்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவதைப் பார்ப்பது மிகவும் பேரழிவை ஏற்படுத்துகிறது” என்று தெரிவித்துள்ளார்.

லொஸ் ஏஞ்சல்ஸைச் சுற்றியுள்ள 06 காட்டுத் தீ விபத்துகள் கிட்டத்தட்ட 38,000 ஏக்கர் நிலத்தை எரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், தீயை அணைப்பதற்கு தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இதனால் ஆயிரக்கணக்கானோர் வீடுகள் இல்லாமலும் மின்சாரம் இல்லாமலும் தவிக்கின்றனர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள மக்கள் சமூக ஊடக செயலியான டிக்டொக் மூலம், வீடுகளை இழந்த மக்களுக்கு நன்கொடைகளைப் பெற்று விநியோகிக்கின்றனர். நடிகர் ஆன்டணி ஹாப்கின்ஸின் வீடு தீயில் எரிந்து நாசமானதாக கூறப்படுகிறது. பாலிசேட்ஸ் தீ விபத்தில் அழிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான வீடுகளில் ஆஸ்கர் விருது பெற்ற நடிகர் சர் ஆன்டணி ஹாப்கின்ஸின் வீடும் ஒன்று என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. போர்ட் டால்போட்டைச் சேர்ந்த ஆன்டணி ஹாப்கின்ஸ், "நாங்கள் எங்களுடன் எடுத்துச் செல்வது அன்பு மட்டுமே" என்று அவர் இன்ஸ்டாகிராமில் குறிப்பிட்டுள்ளார்.

ரியாலிட்டி நட்சத்திரம் பாரிஸ் ஹில்டன், நடிகர் பில்லி கிரிஸ்டல், ஆஸ்கார் விருது பெற்ற பாடலாசிரியர் டயான் வாரன், தி பிரின்சஸ் பிரைட் நட்சத்திரம் கேரி எல்வெஸ் உள்ளிட்ட திரை பிரபலங்களும் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். தீயில் எரிந்து சாம்பலாகிவிட்ட தங்கள் வீடுகளைப் பார்க்க வரும் மக்களில் பலர், தங்களின் விலைமதிப்பு மிக்க பொருட்களைக் கண்டுபிடிக்க சாம்பலை துழாவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, அமெரிக்க தேசிய வானிலை ஆய்வு மையம், தீ தொடர்பான புதிய வானிலை எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், இன்லேண்ட் எம்பயர், சான் பெர்னார்டினோ கவுண்டி மலைகள், சாண்டா அனா மலைகள் மற்றும் உள்நாட்டு ஆரஞ்சு கவுண்டியில் மணிக்கு 45 மைல் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இத்தகைய வானிலை காரணமாக காட்டுத்தீ வேகமாக பரவக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயில் உயிரிழந்தவர்களுக்கு போப் பிரான்சிஸ் இரங்கல் தெரிவித்துள்ளார். தீயை கட்டுப்படுத்த போராடும் பணியாளர்களின் முயற்சிகள் வெற்றி பெற அவர் பிரார்த்தனையில் ஈடுபட்டதாக வாடிகன் தெரிவித்துள்ளது.

# கனேடிய பிரதமர் போட்டியிலிருந்து பின்வாங்கினார் அனிதா இந்திரா



கனேடிய பிரதமர் பதவிக்கான போட்டியிலிருந்து கோவையை பூர்வீகமாகக் கொண்ட அனிதா இந்திரா விலகியுள்ளார். தற்போது எம்.பியாக இருக்கும் அவர், மீண்டும் தேர்தலில் போட்டியிட போவதில்லை என்றும் தெரிவித்தார்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகுவதாக அறிவித்தார். லிபரல் கட்சியின் தலைவர் பதவியிலிருந்தும் விலகினார். லிபரல் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்படுபவர் அக்கட்சி சார்பில், கனேடிய பிரதமராக தெரிவு செய்யப்படுவார் என்பதால், கட்சித் தலைவராவதற்கு கடும் போட்டி நடக்கிறது.

கனேடிய பிரதமர் தேர்தலில், கோவை மாவட்டம் வெள்ளலூரை பூர்வீகமாகக் கொண்ட அனிதா இந்திரா போட்டியிடுவதாக செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. மீடியாக்களின் கவனம் அவர் பக்கம் திரும்பியது. அவரது வாழ்க்கை வரலாறு குறித்து சிறப்பு கட்டுரைகள் நாளிதழ்களில் அதிகம் வெளியாகின. தற்போது, பிரதமர் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என அனிதா இந்திரா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: முக்கிய அமைச்சரவை இலாக்காக்களை வழங்கிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு நன்றி. தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன். என்னை எம்.பியாக்கிய ஓக்வில்லி தொகுதி மக்களுக்கு உண்மையாகவே நன்றியுடன் இருக்கிறேன். கடந்த இருபது ஆண்டுகளாக நானும் எனது கணவரும் எங்கள் குழந்தைகளை வளர்த்த அற்புதமான சமூகம். இந்த சமூக மக்களுக்கு நன்றி. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

- நடிகைக்கு பணம் கொடுத்த வழக்கு -

# டொனால்ட் ட்ரம்ப் நிபந்தனையின்றி விடுவிப்பு



ஆபாசப் பட நடிகைக்கு இரகசியமாக பணம் கொடுத்த வழக்கில் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் 34 குற்றச்சாட்டுகளில் இருந்தும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2016இல் நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டார். இந்த தேர்தலுக்கு முன்பு, ஸ்டோர்மி டேனியல்ஸ் என்ற ஆபாசப் பட நடிகையுடன் இருந்த தொடர்பை மறைப்பதற்காக அவருக்கு ட்ரம்ப் 1,30,000 டொலர்கள் வழங்கியதாக புகார் எழுந்தது. இதுதொடர்பான வழக்கு மன்ஹாட்டன் நடுவர் மன்றத்தில் ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தண்டனை விவரங்களை வெளியிடுவதாக தெரிவித்திருந்தது. இந்த நிலையில் டொனால்ட் ட்ரம்ப் நிபந்தனைகள் எதுவும் இன்றி சிறைத்தண்டனை, அபராதம் எதுவுமின்றியும் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளார். ட்ரம்ப் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டபோதிலும், நீதிபதி ஜுவான் எம்.மெர்ச்சன் அவரை விடுவிப்பதாக அறிவித்திருப்பது கவனம் ஈர்த்துள்ளது.

***வழக்கின் பின்னணி:*** டொனால்ட் ட்ரம்ப் ரியல் எஸ்டேட் அதிபராக இருந்தபோது கடந்த 2006 ஜூலையில் நடந்த கோல்ஃப் போட்டியின்போது ஸ்டோர்மி டேனியல்ஸை சந்தித்தார். அப்போது ஸ்டோர்மிக்கு 27 வயது, ட்ரம்புக்கு 60 வயது. மேலும் ட்ரம்பின் மூன்றாவது மனைவி மெலனியாவுக்கு மகன் பரோன் பிறந்து 04 மாதம் ஆகியிருந்தது. ஸ்டோர்மி கடந்த 2018இல் வெளியிட்ட தனது புத்தகத்தில் ட்ரம்ப் உடன் தனக்கு ஏற்பட்ட தொடர்பை விவரித்துள்ளார். ட்ரம்ப் உடன் உடல்ரீதியான தொடர்பு ஏற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். ஆனால் இதை ட்ரம்ப் மறுத்துள்ளார். ஸ்டோர்மிக்கு பணம் தரப்பட்டதை கடந்த 2018 ஜனவரியில் ‘வால் ஸ்ட்ரீட் ஜர்னல்’ கட்டுரையாக வெளியிட்டது. இதுவே ட்ரம்ப் மீதான குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படையாக அமைந்தது.

# சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை அரசியல் ரீதியானது

## வங்கதேச அரசு விளக்கம்



‘வங்கதேசத்தில் கடந்த சில மாதங்களாக சிறுபான்மையினருக்கு எதிராக தொடர்ந்து வரும் வன்முறை சம்பவங்கள் பெரும்பாலும் அரசியல் ரீதியானது; வகுப்புவாத நோக்கத்தில் நடந்த தாக்குதல்கள் குறைவு’ என்று அந்நாட்டு இடைக்கால அரசு விளக்கமளித்துள்ளது. பொலிஸ் அறிக்கையை மேற்கோள்காட்டி அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தில், வகுப்புவாத வன்முறைகள் தொடர்பான புகார்களைப் பெற பிரத்தியேக ‘வட்ஸ்ஆப்’ எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கதேசத்தில் மாணவர்கள் போராட்டத்தின் எழுச்சியை அடுத்து அவாமி லீக் கட்சியின் தலைவர் ஷேக் ஹசீனா, பிரதமர் பதவியை இராஜிநாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையொட்டி, அந்த நாடு முழுவதும் சிறுபான்மையினர் மற்றும் அவர்களின் வழிபாட்டுத் தலங்களைக் குறிவைத்து வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றன. இதைக் கண்டித்து போராடியதற்காக துறவி சின்மயி கிருஷ்ண தாஸ் தேசத்துரோக வழக்கில் கைதானார்.

இந்நிலையில், ஷேக் ஹசீனா நாட்டைவிட்டு வெளியேறிய கடந்த ஆண்டு ஆக. 5ஆம் திகதிக்கு முந்தைய நாளிலிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிறுபான்மையினருக்கு எதிரான 2010 வகுப்புவாத வன்முறை சம்பவங்கள் நடந்ததாக வங்கதேச இந்து, பௌத்த, கிறிஸ்தவ ஒற்றுமை கவுன்சில் சமீபத்தில் குற்றஞ்சாட்டியிருந்தது.

இக்குற்றச்சாட்டுகள் பற்றி பொலிஸ் விசாரணையின் தகவல்களை இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸின் செய்தி அலுவலகம் அறிக்கையாக வெளியிட்டுள்ளது. அதில், ‘மொத்தம் 1,769 வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன. இதுதொடர்பாக பொலிஸார் 62 வழக்குகளை பதிவு செய்து, 35 குற்றவாளிகளை கைது செய்துள்ளனர். எனினும், பெரும்பாலான வழக்குகளில் வன்முறைகள் (1,234 சம்பவங்கள்) அரசியல் காரணங்களுக்காக நடந்துள்ளன என்றும் வகுப்புவாத நோக்கத்துடன் நடந்த தாக்குதல்கள் (20 சம்பவங்கள் மட்டுமே) குறைவு என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

ஒகஸ்ட் 4ஆம் திகதி முதல், வகுப்புவாத வன்முறைகள் தொடர்பான புகார்களில் பொலிஸார் மொத்தம் 115 வழக்குகள் பதிவு செய்துள்ளனர். குறைந்தது 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வகுப்புவாத வன்முறை புகார்களைப் பெறவும் சிறுபான்மை சமூகத் தலைவர்களுடன் தொடர்ந்து தொடர்பைப் பேணவும் வங்கதேச பொலிஸார் புதிய வட்ஸ்ஆப் எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளனர். வகுப்புவாத வன்முறைகளில் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

# சிதம்பரம் நடராஜர் கோயில் தேரோட்டம் ஆயிரக்கணக்கில் குவிந்த பக்தர்கள்





உலகப் புகழ்பெற்ற சிதம்பரம் நடராஜர் கோயில் தேரோட்டம் நேற்று நடந்தது. ‘‘சிவ சிவா’’ என்ற முழக்கத்துடன் ஆயிரக்கணக்கானோர் வடம் பிடித்து தேரை இழுத்தனர்.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்தியின் மார்கழி ஆருத்ரா தரிசன உற்சவம் கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதைத்தொடர்ந்து கடந்த 5ஆம் திகதி சுவாமிகள் வெள்ளி சந்திர பிரபை வாகன வீதிஉலா நடைபெற்றது.

6ஆம் திகதி தங்க சூரிய பிரபை வாகனத்தில் வீதி உலாவும் 7ஆம் திகதி வெள்ளி பூத வாகனத்தில் வீதிஉலாவும் 8ஆம் திகதி வெள்ளி ரிஷப வாகனத்தில் தெருவடைச்சான் வீதி உலாவும் 9ஆம் திகதி வெள்ளியானை வாகன வீதிஉலாவும் 10ஆம் திகதி தங்க கைலாச வாகன வீதி உலாவும் நேற்றுமுன்தினம் (ஜன.11) தங்க ரதத்தில் பிச்சாடனார் வெட்டுக்குதிரையில் வீதிஉலாவும் நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து நேற்று (ஜன. 12) தேர்த் திருவிழா நடைபெற்றது. காலை 06 மணிக்குள் மேலதாளம் முழங்கிட, தேவாரம், திருவாசகம் பாடிட, வேத மந்திரங்கள் ஓதிட, நடராஜமூர்த்தி, சிவகாமசுந்தரி அம்பாள், விநாயகர், சுப்ரமணியர், சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் தனித்தனி தேரில் எழுந்தருளினர். இதனைத் தொடர்ந்து பக்தர்கள் சிவ சிவா என்ற முழக்கத்துடன் வடம் பிடித்து இழுத்தனர்.

தேர் கீழவீதி, மேலவீதி, தெற்குவீதி, வடக்குவீதி வழியாக மீண்டும் இரவு 07 மணியளவில் கீழவீதி நிலையை அடையும். இரவு 08 மணிக்கு ஆயிரங்கால் முன் முகப்பு மண்டபத்தில் சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்தி சுவாமிகளுக்கு ஏககால லட்சார்ச்சனை நடைபெறும். இன்று (ஜன.13) அதிகாலை சூரிய உதயத்துக்கு முன்பு காலை 04 மணி முதல் 06 மணிவரை சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்திக்கு மகாபிஷேகம் நடைபெறும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7